பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 26 சனிக்கிழமை (09.05.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 164

## இலங்கை வந்து திரும்பிய

# பிரிட்டிஷ் எம்.பிக்கள் குழுத்தலைவர் இந்தியாவுக்கு அவசர விஜயம்!

### இராணுவ நடவடிக்கைகளை கண்காணிப்பது அவசியம் என்கிறார்



புதுடில்லி, மே 9

பிரிட்டனின் இலங்கைக்கான விசேட பிரதிநிதியும் அண்மையில் கொழும்புக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் குழுவின் தலைவருமான டெஸ் பிறவுணி அவசரமாக இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக அவர் இந்திய வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனன் உள்ளிட்ட தலைவர்களைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

பாதுகாப்பு வலயத்தில் சிக்கியுள்ள 50 ஆயிரம் மக்களின் பாதுகாப்பே மிகவும் முன்னுரிமைக்குரிய விடயம். தற்போது இலங்கையில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் விதத்தைக் கண்காணிப்பது அவசியம். அதேவேளை, இடம்பெயர்ந்துள்ள 2 லட்சம் மக்கள் குறித்தும் கவனம் செலுத்தவேண்டும். மேலதிக வளங்கள் தேவை, சர்வதேச மனிதாபிமான அமைப்புகளுக்கு விசா வழங்கப்படவேண்டும்- என்று பேச்சுக்களின் பின்னர் அவர் கருத்துத் தெரிவித்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பில் பல பகுதிகளில் தேடுதல்; நூற்றுக்கணக்கானோர் கைதாகினர்

கொழும்பு, மே 9

கொழும்பின் பல பகுதிகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நடத்திய திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலில் தமிழர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, தெஹிவளை,

(16 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் தடைகளைத் தகர்ப்பதற்கு எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தத் தடையில்லை

### பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய சொல்கிறார்

கொழும்பு, மே 9

வடபகுதியில் இடம்பெறும் போரில் விடுதலைப் புலிகளின் தடைகளைத் தகர்த்து முன்னேறுவதற்கு அரச படையினர் எந்தவிதமான ஆயுதங்களையும் பயன்படுத்துவார்கள். அந்த விடயத்தில் அவர்களுக்கு எந்தவொரு ஆயுதத்தையும் பயன்படுத்துவதற்கும் தடை விதிக்கப்படவில்லை எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

''விடுதலைப் புலிகளைத் தாக்குவது என்பது வேறு. அப்பகுதியில் உள்ள மக்களை மீட்பது என்பது வேறு. இந்த இரண்டு நடவடிக்கைகளுக்கும் வெவ்வேறான ஆயுதங் களைத்தான் படையினர் பயன்படுத்துவார்கள். அத்துடன், இந்த இரண்டு நடவடிக்கைகளுக்கும் வெவ்வேறான இராணுவ உபாயங்களையும் பயன்படுத்த வேண்டியிருக்கும்'' - எனவும் கோத்தபாய குறிப்பிட்டிருக்கின்றார்.



தேசிய தொலைக் காட்சியான 'ரூபவாஹினி'யில் இடம்பெற்ற பேட்டியொன்றி

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மாளிகாவத்தைப் பள்ளிவாசலுக்கு முன்பாக நேற்று நண்பகல் பயங்கரம்!

### ஒருவர் பலி; ஒன்பது பேர் படுகாயமுற்றனர்

கொழும்பு, மே 9

கொழும்பு மாளிகாவத்தைப் பகுதியில் ஜும்மா பள்ளி வாசலுக்கு முன்னால் நின்றவர்கள் மீது நேற்று நண்பகல் 1.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் 9 பேர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலய விஸ்தீரணம் குறைக்கப்பட்டது; 6 சதுர கி. மீற்றர் நேற்று முதல் 2 சதுர கி.மீற்றரானது

கொழும்பு, மே 9

முல்லைத்தீவு புதுமாத்தளனில் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருந்த பகுதியில் அரசாங்கம் தற்போது மாற்றத்தை அறிவித்துள்ளது.

இதற்கு முன்பு வரையறுக்கப்பட்டிருந்த பாதுகாப்பு பிரதேசம், தற்போதைய நிலைமைகளை கருத்தில் கொண்டு மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகவும் அங்குள்ள பொதுமக்கள் அடர்த்தியாக இருக்கும் பிரதேசங்களை கருத்தில் கொண்டும் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் இராணுவம் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் உத்தியோக பூர்வமாக அறிவித்தது.

தற்போதைய நிலையில் காரியமுல்லை வாய்க்கால் பகுதிக்கு தெற்கே இருக்கும் பிரதேசம், வெள்ளமுள்ளிவாய்க்கால் பகுதி உள்ளிட்ட நிலப்பகுதி புதிய பாதுகாப்பு வலயப்பகுதியாக வரையறுக்கப்பட்டுள்ளது. இரண்டு கிலோமீற்றர் நீளமும் ஒன்றரை கிலோமீற்றர் அகலமும் கொண்ட இந்தப் பகுதி புதிய பாதுகாப்புவலயப் பகுதியாக வரையறுக்கப்பட்டுள்ளது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

### அவுஸ்திரேலியாவில் கண்டனப் பேரணி

கொழும்பு, மே 9

ஆஸ்திரேலியாவின் விக்டோரிய மாநிலத்தில் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் நடத்தி வரும் 'ஓயாத உரிமைக்குரலின்' ஒரு பகுதியாக கவனயீர்ப்புக் கண்டனப் பேரணி இன்று சனிக்கிழமை நடைபெறவிருக்கின்றது.

கடந்த புதன்கிழமை தொடக்கம் மெல்போர்ன் நகரில் நாளாந்தம் பிற்பகல் 4 மணி

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் வசம் இன்னும் ஓர் விமானமும் ஒரு ஹெலியும்; அவர்களின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே உள்ளனவாம்!

கொழும்பு, மே 9

இரண்டு பேர் செல்லக்கூடிய ஹெலிகொப்ரர் ஒன்றும் விமானம் ஒன்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வசம் இப்போதும் இருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பகுதியில் இவற்றை அவர்கள் வைத்திருப்பதாகவும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் வசம் மற்றொரு விமானம் இப்போதும் இருப்பதாக சில செய்திகள் தெரிவித்த போதிலும், இராணுவ மற்றும் புலனாய்வு வட்டாரங்கள் அதனை மறுத்தே வந்தன. அவர்களிடம் இருந்த இரண்டு விமானங்களும் கடந்த பெப்ரவரி மாதத்தில் கொழும்பில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் இழக்கப்பட்டு விட்டதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்து வந்தன.

ஆனால், முல்லைத்தீவில் இருந்து வெளியேறிய பொதுமக்கள் மற்றும் கைது

(16 ஆம் பக்கம் பாரக்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



வல்வை முத்துமாரியம்மன் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று பக்திபூர்வமாக நடைபெற்றது. முத்துமாரியம்பாள் பல்லக்கில் உலா வருவதையும் பிள்ளையார், முருகன், அம்பாள் மூன்று தேர்களில் வலம் வந்து அருள்காட்சி அளிப்பதையும் படங்களில் காணலாம். தேர் வடத்தை ஒரு பக்கத்தில் பெண்களும் மறுபக்கம் ஆண்களும் இழுத்துவருகின்றனர். (படங்கள்: சுந்தா..)

# இலங்கை வந்திருந்த பிரிட்டிஷ் எம்.பிக்கள் மீது ஜனாதிபதி எரிந்து விழுந்தார் எனக் கண்டனம்

கொழும்பு, மே 09

சமீபத்தில் இலங்கைக்கு வந்திருந்த பிரிட்டிஷ் சர்வகட்சி எம். பிக்கள் மீது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீறிப் பாய்ந்தார்- சீற்றத் துடன் உரையாடினார் - என்று அந்த எம். பிக்களில் ஒருவரான மல்கம் புறூஸ் தெரிவித்திருக்கின்றார்.

தமது இலங்கை விஜயம் தொடர்பாக பிரிட்டனின் 'த பிரஸ் அன்ட் ஜோர்னல்' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே மல்கம் புறூஸ் இந்தத் தகவலை வெளியிட்டார்.

''ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தான் மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கையை மிகுந்த ஆக்ரோஷத் துடன் நியாயப்படுத்தினார்'' என நாடாளுமன்ற உறுப்பினர் மல்கம் புறூஸ் கூறினார்.

''ஜனாதிபதி ராஜபக்ஷ எம்முடனான சந்திப்பில் பொறுமை இழந்தவராக, சீற்றம் கொண்டவராகக் காணப்பட்டார். நாங்கள் இலங்கையை குடியேற்ற நாடாக நடத்துகிறோம் எனக் குற்றம் சாட்டினார்'' எனவும் புறூஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவம் பொதுமக்கள் மீது குண்டுவீசுவதாக தெரிவிக்கப்படு வதை முற்றுமுழுதாக நிராகரித்த ஜனாதிபதி மஹிந்த, ''நீங்கள் (பிரிட்டன்) ஈராக்கிலும் அமெரிக்காவிலும் பொது மக்களைக் கொல்கின்றீர்கள். எனவே இங்கு வந்து எங்களுக்குப் பாடம் நடத்தத் தேவையில்லை'' என்று சீற்றத்து டன் தெரிவித்தார். எனினும், இலங்கைக் கும் எங்களுக்கும் இதற்கு முன் பிரச்சினைகள் இல்லை. நாங்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிப்பதற்காக இங்கு வரவில்லை. அகதிகள் விடயத்தில் எவ்வாறு உதவலாம் என ஆராயவே வந்தோம் என்று நாங்கள் தெரிவித்த பின்னரே ஜனாதிபதி வழமைக் குத் திரும்பினார் என்றும் புறூஸ் தெரிவித்துள்ளார்.

''பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி அளிப்பதற்கு சர்வதேச சமூகத் துக்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும். மனிதாபிமான அமைப்புகளை உள்ளே அனுமதிக்காமல் இருப்பது விடுதலைப் புலிகள் அங்கு நடப் பவற்றை திரிபுபடுத்தவே உதவும் என ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தினோம்'' என்றும் புறூஸ் ''த பிரஸ் அன்ட் ஜோர்னல்'' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார். (அ-சி)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 28.11.1947

மறைவு 09.04.2009

திருமதி

## சுவாமிநாதன் ரேவதி

கடந்த (09.04.2009) வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் மரணச் செய்திகேட்டு உடன் வருகை தந்தவர்களுக்கும்,தந்தி,தொலைபேசி மூலமும், நேரில்வந்தும் ஆறுதல் தெரிவித்தோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் எமக்கு கை கொடுத்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (09.05. 2009) சனிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல, 88, கோவில் வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



தேசிய சேமிப்பு வங்கி, சாவகச்சேரி கிளையின் வங்கி உத்தியோகத்தரான திருமதி துஷ்யந்தி அருளானந்தம் அவர்களின் அன்புத் தந்தையும் யாழ்.கிளை முகாமையாளர் திரு.வி.அருளானந்தம் அவர்களின் பாசமிகு மாமனாருமான

### தேசிங்கம் குணசிங்கம்

(இளைப்பாறிய விமானப்படை உத்தியோகத்தர்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளர், உத்தியோகத்தர்கள்,
சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கி.

## மரண அறிவித்தல்

### பாலாத்தை வைத்திலிங்கம்

(முன்னாள் லிகிதர், நடேஸ்வராக் கல்லூரி)

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் ஏழாலையை வசிப்பிடமாகவும் தற்போது திருநெல்வேலியில் வசிப்பவருமான பாலாத்தை வைத்திலிங்கம் நேற்று (08.05.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் உமாதேவியின் அன்புக் கணவரும், வைதேகி, உமாகரன், ஜானகி, வாசுகி ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

26/1, ஞானசு வீதி
திருநெல்வேலி.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## இராமகிருஷ்ண மிஷன் தலைவர் யாழ்ப்பாணம் வருகின்றார்

யாழ்ப்பாணம் மே 9

கொழும்பு இராமகிருஷ்ண மிஷனின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தஜி மகராஜ் நாளை மறுதினம் யாழ்ப்பாணம் வருகின்றார்.

இடம் பெயர்ந்துள்ள வன்னி மக்களின் நிவாரணப்பணிக்கு உதவும் பொருட்டும், எதிர்காலத்தில் உரும்பிராயில் அமையவுள்ள இராமகிருஷ்ண மிஷனுக்கான கட்டட வேலைகளை பார்வையிடும் பொருட்டும் அவர் விஜயம் மேற்கொள்கின்றார்.

கடந்த மாத இறுதியில் இராமகிருஷ்ண மிஷனின் தலைமைப் பொறுப்பை ஏற்ற பின்னர் முதற் தடவையாக அவர் இங்கு வருகின்றார்.18 ஆம் திகதி வரை தாவடியில் தங்கியிருக்கும் அவரிடம் ஆசீர்வாதம் பெற விரும்புவோர் தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-7)


## வான் விற்பனைக்கு

றூட்டுடன் பாடசாலை வான் (Rosa 4D R5), ஐஸ் கிறீம் வான் (ELF 150) என்பன உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 222 3472, 0778575184, 0778449715

## பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம்

கலைப்பிரிவுக்கான

A/L 2011

இலகு கணிதம்

ஆரம்பம்:- இன்று (09.05.2009)சனி 11am

ஆசிரியர்:- MR ஐங்கரன் B.sc

உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

இவ்வாசிரியரின் வகுப்புகள் எமது நிறுவனத்தில் மட்டும்தான் நடைபெறும்.


# சுழிபுரம் மத்தியில் நேற்றிரவு தாயும், மகனும் வெட்டிக்கொலை

யாழ்ப்பாணம், மே 9

சுழிபுரம் மத்தி கல்லை வேம்படிப் பகுதியில் நேற்றிரவு 8 மணியளவில் வெட்டுக் காயங்களுக்கு இலக்காகி தாயும் மகனும் பலியானார்கள்.

அதே இடத்தைச் சேர்ந்த இராசன் விமலா (வயது46) என்பவரும் அவரது மகனான இராசன் ரசிதரன் (வயது20) என்பவருமே பலி யானவர்கள் ஆவர்.

இரு குடும்பங்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வெட்டுச் சம்பவத்தில் முடிந்தது என்றும் - இருவருக்கும் நெஞ்சில் கோடாரி வெட்டுக்காயங்கள் காணப்பட்டன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த நிலையில் சங்கானை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்ட போது இடைவழியில் மரணமானார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளன. (1-78)

## தேசிய கல்வியியற் கல்லூரியில் இன்று உள்ளகப் பயிற்சி ஆசிரியர் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 9

யாழ். தேசிய கல்வியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான கூட்டம் இன்று காலை 9மணிக்கு கல்லூரியில் இடம்பெறவுள்ளது என பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்தார்.

வேலைத்திட்டம், பாடக் குறிப்பு, பதிவுக் கையேடு, மீள் நோக்கு கையேடு ஆகியவற்றுடன் வருமாறு அவர் கேட்டுள்ளார்.

செயல்நிலை ஆய்வு செயலமர்வும் இன்று இடம்பெறவுள்ளது. (1)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை முருகையா

(ஓய்வு பெற்ற உதவி அரச அதிபர், அடம்பன் ஓய்வு பெற்ற உதவி ஆணையாளர், விற்பனைத்திணைக்களம், யாழ்ப்பாணம், ஓய்வு பெற்ற உதவி ஆணையாளர், ஆள் பதிவு திணைக்களம், யாழ்ப்பாணம், ஓய்வு பெற்ற பிரதேச செயலர், நுவரெலியா, நல்லூர். இலங்கை தூதுவராலயம், ஜப்பான்)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் யாழ். கச்சேரி, கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை முருகையா நேற்று (08.05.2009) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரேசன் வீதி,
கோண்டாவில்.

தகவல்:
திருமதி வ. ராஜேந்திரன்
செ.தர்மலிங்கம் (சகோதரர்கள்).

### திருமதி குழந்தை செல்லம்மா



அச்சுவேலி தெற்கு, நாவற்காட்டைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காடு, 3ஆம்கட்டை,சிங்கராயர் வளவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லக்கண்டு என்று அன்பாக அழைக்கப்படும் திருமதி குழந்தை செல்லம்மா நேற்று (08.05.2009)வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி -வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், குழந்தையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தங்கராசு மற்றும் ராசமுத்து,செல்லத்துரை(சாமி),செல்லக்கா என்று அன்பாக அழைக்கப்படும் செல்வரத்தினம், செல்வநாயகி, சிவலிங்கம், அருந்ததி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்திரகுமார் (லண்டன்), பவானி (லண்டன்), தவமலர் (இன்பம்), சந்திரதாஸ் (லண்டன்) வளர்மதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும்,சௌதாமினி (லண்டன்), ரவீந்திரன் (லண்டன்),விஜயதாஸ் (குட்டி- உரிமையாளர் விஜய் வார்ப்புத் தொழிலகம், 3ஆம்கட்டை), வசந்தி (லண்டன்), ஜெனஸ்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெசிக்கா, கரிகரன், மதுசியா, ஸ்ரெபெனி, சோபி, கெவின்றோஸ், விதர்சன், சங்கீத், லிவியானா, மெல்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2009) சனிக்கிழமை பிற்பகல் 2.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயாணத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் கட்டை,
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## கலைஞருக்குப் பிறந்த 'சுடலை ஞானம்'!

தமிழக அரசியல் தலைவர்களின் நிலைமை பார்க்கப் பரிதாபமாக இருக்கின்றது. அதுவும் 'திரிசங்கு சொர்க்கம்' என்ற இக்கட்டில் - இரண்டுங்கெட்டான் நிலையில் - பரிதவிக்கும் தமிழக முதல்வர் கலைஞரின் அந்தரிப்பு இன்னும் பாவமாக இருக்கின்றது.

பதவிச் சுகத்தைத் தக்க வைப்பதற்காக - அதிகாரச் செருக்கைப் பேணுவதற்காக - இதுவரை காலமும் ஈழத் தமிழர் விடயத்தில் அவர் முன்னெடுத்த நாடகம், இப்போது அவருக்கு எதிரான முடிவுக்கட்டத்துக்குக் கொண்டுவந்திருப்பது அவருக்குப் பெரும் வேதனை தரக்கூடியதுதான்.

ஈழத் தமிழர்கள் அழியும்போது - அழிக்கப்படும் போது - அதைப் பார்த்துக்கொண்டு தாம் நடத்திய அபத்த நாடகத்துக்கு உரிய விலை கொடுக்கும் - தண்டனையை எதிர்கொள்ளும் - வேளை அவருக்கு நெருங்கிவிட்டது.

ஈழத் தமிழர்கள் நீதி, நியாயம், உரிமை, கௌரவ வாழ்வு ஆகியவற்றைக் கோரி உக்கிரத்தோடு போராடிய சமயம், அதற்கு உறுதுணை வழங்காமல் எள்ளி நகையாடியோர் இன்று ஈழத் தமிழருக்குத் தனித் தமிழ் ஈழம் பெற்றுக் கொடுப்போம் என்று வாக்குறுதி தந்து மக்களிடம் வாக்குப் பிச்சை கேட்கும் அளவுக்கு - கட்டாயத்துக்கு - வந்திருக்கின்றார்கள்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவிலிருந்து, தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி வரை தமிழகத் தலைவர்கள் பலரும் ஈழத் தமிழர் பிரச்சினையைத் தங்களுக்கு வாக்குத் திரட்டும் விவகாரமாகப் பயன்படுத்தி அவ்விடயத்தில் சந்தர்ப்பவாதிகளாகவே செயற்படுகின்றனர் என்பது வெளிப்படை.

கடந்த ஜனவரியில் - நான்கு மாதங்களுக்கு முன்னர் - இலங்கையில் தமிழர் தாயகத்தில் ராஜபக்ஷ அரசு முன்னெடுத்து வரும் கொடூர யுத்தத்தை நியாயப்படுத்திய ஜெயலலிதாதான், இன்று தனி ஈழத்தையும் நியாயப்படுத்தி, இந்தியப் படைகளை அனுப்பியாவது அதனை நிறுவுவேன் எனச் சூளுரைத்துத் தமிழக மக்களிடம் வாக்கு யாசகம் வேண்டுகின்றார்.

தமிழக மக்களின் உணர்வலைகள் தங்களின் தொப்புள் கொடி உறவுகளான ஈழத் தமிழர்களின்பால் திரும்பியதால் தமிழக அரசியல் தலைவர்களுக்கு ஏற்பட்ட கட்டாயம் இது.

ஆனால், இதனை ஒட்டிய அபத்த நாடகத்தில் தமிழகத் தலைவர்கள் எல்லோரிலும் பெரும் ஏமாற்றுக்கார நடிகர் என்ற தனித்துவத்தை நிலைநிறுத்தியிருப்பவர் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிதான் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை.

ஈழத் தமிழர் விடயத்தில் அவர்களின் நலனுக்கு எதிரான நடவடிக்கைப் போக்கை வெளிப்படையாகவே பின்பற்றி வருகின்றது இந்தியாவின் மத்திய அரசை வழி நடத்தும் காங்கிரஸ் தலைமைப்பீடம்.

தமிழகத்தில் தன்னுடைய சிறுபான்மை ('மைனாரிட்டி') அரசைத் தக்க வைப்பதற்காகக் காங்கிரஸ் கட்சியின் தயவில் தங்கியிருக்கும் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி, அதன் காரணமாக இச்சமயத்தில் பேரவலப்படும் ஈழத் தமிழர்களின் விடயத்தில் மத்திய காங்கிரஸ் அரசை மீறிச் செயற்பட முடியாமல், அதற்குக் கட்டுப்பட்டு நடந்து, ஈழத் தமிழருக்காக ஆற்ற வேண்டிய வரலாற்றுக் கடமையைப் புறந்தள்ளிப் பெரும் துரோகமிழைத்திருக்கின்றார்.

அரசியல் பதவி சுகத்தை அனுபவிக்கும் ஒரே நோக்கத்துக்காக ஈழத் தமிழர் விவகாரத்தில் தாம் புரிந்த துரோகங்களை மூடி மறைக்கக் கலைஞர் போட்ட கூத்தும் நாடகமும் அளப்பரியவை.

அனைத்துக் கட்சிக் கூட்டம், மனித சங்கிலிப் போராட்டம், இராஜினாமா அச்சுறுத்தல், சர்வகட்சிகளுடனும் சென்று புதுடில்லிக்குக் காலக்கெடு விதித்து மிரட்டல் அறிவிப்பு வெளியிடல், 'சாகும்வரை' உண்ணாவிரதம் என்று அவர் அரங்கேற்றிய நாடகங்களின் வரிசையில் இப்போது வைத்தியசாலையில் போய்ப் படுத்துக்கொண்டு, 'தமிழ் ஈழம் அமைக்கும் பொறுப்பை ஏற்கிறேன்' - என்று அறிவிப்பு விடுக்கும் கூத்தை அவர் கடைசியாக அரங்கேற்றியிருக்கின்றார்.

பாவம்! இதனைத்தான் 'காலம் கடந்த ஞானம்' அல்லது 'சுடலை ஞானம்' என்பதா என்று எண்ணிப் பரிதாபப் படுகின்றார்கள் நோக்கர்கள்.

'தமிழ் ஈழம் அமைக்கும் பொறுப்பை ஏற்கிறேன்' என்ற, அவரின் அந்த இறுதி அறிவிப்பில் கூட தமது வழமையான 'குசும்பை' அவர் கைக்கொள்ளத் தவறவில்லை.

ஈழத் தமிழர் விடயத்தில் தமது 'சாதனை'களைப் பட்டியலிடுவதற்காக, '1956 இல் தி.மு.க.பொதுக்குழுவில் இலங்கைத் தமிழருக்காக விசேட பிரேரணை முன்மொழிந்து நிறைவேற்றினேன்', 'சட்டசபை உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்தேன்' என்றெல்லாம் பழைய கதை பேசிக்கொண்டிருப்பவர் கலைஞர்.

அந்த வரிசையில் இப்போது 'ஈழம் அமைக்கும் பொறுப்பை ஏற்கிறேன்' என்ற தமது அறிவிப்பில் கூட *''இலங்கைத் தமிழருக்கு கணிசமான அளவு நீதியை உறுதிப்படுத்தியுள்ளோம். அடுத்த கட்டமாக அவர்கள் ஈழத்தைப் பெற வேண்டும். நான் பொறுப்புகளை எடுத்துக்கொண்டபின் அடுத்த கட்டமாக ஈழம் உருவாக்கப்படுவதற்கான சகல முயற்சிகளையும் உறுதிப்படுத்துவேன்''* - என்று கூறியிருக்கின்றார் கலைஞர்.

சரி. இனி அவர் ஈழம் அமைக்கும் முயற்சிகளைப் பொறுப்பெடுத்து உறுதிப்படுத்துவார் என்று அவர் கொடுக்கும் 'கயிறை' விட்டுவிடுவோம். இதுவரை 'இலங்கைத் தமிழர்களுக்கு கணிசமான அளவு நீதியை உறுதிப்படுத்தியுள்ளோம்' என்று அவர் கூறும் கணிசமான அளவு நீதி எது என்பதுதான் புரியவில்லை.

தாமும் தமது தி.மு.க. தரப்பும் கடந்த ஐந்து ஆண்டுகளாக மத்தியில் முண்டு கொடுத்து நிலை நிறுத்தியிருந்த காங்கிரஸ் அரசு இலங்கையில் தமிழர்கள் கொன்றொழிக்கப்படும் போரில் கொழும்புக்கு அளவற்ற உதவிகளை வழங்கியமையைத்தான் ஈழத் தமிழர்களுக்கு கணிசமான அளவு நீதி கிடைப்பதை உறுதிப்படுத்திய தங்கள் சாதனையாகக் கருதுகின்றாரோ கலைஞர்....?

இலங்கையில் தமிழர்களின் இன்றைய பேரவல நிலைக்குப் பிரதான காரணம், அவர்கள் மீது கொடூரப் போர் தொடுத்திருக்கும் கொழும்புக்கு இந்திய மத்திய அரசு கொடுத்த ஆதரவு, ஒத்துழைப்பு, உதவி போன்றவைதான். அதில் இரண்டு கருத்துகளுக்கு இடமில்லை.

அத்தகைய மத்திய அரசுக்கு முண்டுகொடுத்து ஈழத் தமிழர்களுக்குப் பெரும் துரோகம் இழைத்திருக்கும் கலைஞரும், தி.மு.கவினரும் அதற்காக முதலில் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும். அதுவே இதுவரை அவர்கள் இழைத்த இழி செயல் போக்குக்கு ஆகக் குறைந்த பட்ச பிராயச்சித்தமாகும். அதைக் கூடச் செய்யாது இதுவரை ஈழத் தமிழர்களுக்குத் தாம் இழைத்த அநீதிகளை மூடி மறைத்து, நீதியே செய்தவர்களாகத் தம்மைக் காட்ட அவர்கள் முயல்வது, மேலும் அரசியல் துரோகமாகும்.

தனி ஈழம் அமைக்கும் பொறுப்பை ஏற்கிறேன் என்று அறிவிப்பு விடுக்கும் அளவுக்கு 'சுடலை ஞானம்' வந்த பின்னரும் கூட, இதுவரை இழைத்த அநீதிகளை மூடி மறைத்து நீதியாகக் காட்ட முயலும் அவரது எத்தனம், ஈழத் தமிழர் விடயத்தில் அவர் திருந்தவில்லை, தொடர்ந்தும் கூத்தாடுகின்றார் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

# பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்காமையால வன்னிக்கான நிவாரண விநியோகத்தில் சிக்கல்

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தெரிவிப்பு

கொழும்பு, மே 9

பாதுகாப்பு குறித்த உத்தரவாதம் அளிக்காமையினால், மோதல் தவிர்ப்பு வலயத்தில் உணவு, மருந்துப் பொருள் உள்ளிட்ட நிவாரணப் பொருள்களை விநியோகம் செய்வதில் சிக்கல் உருவாகியுள்ளதென செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அறிவித்துள்ளது.

வன்னி மோதல் தவிர்ப்பு வலயத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சிக்கித் தவிப்பதாக செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் ஜெனீவா பேச்சாளர் மார்கல் இசார்ட் தெரிவித்துள்ளார்.

உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையினால் உணவுப் பொருள்களை விநியோகம் செய்வதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதாகவும் இசார்ட் குறிப்பட்டுள்ளார்.

அரசாங்கப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் உக்கிர மோதல்களின் காரணமாக பிரதேசத்திற்குள் பிரவேசிப்பதில் சிக்கல்கள் உருவாகியுள்ளதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வன்னி மோதல் தவிர்ப்பு வலயத்தில் சிக்கி அல்லலுறும் அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களின் பட்டினிப் பிணியைத் தீர்க்க மோதல்களில் ஈடுபட்டு வரும் சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறிப்பாக உணவு விநியோகத்தை சீராக மேற்கொள்ள தமிழீழ விடுதலைப் புலிகளும், அரசாங்கப் படையினரும் பாதுகாப்பு உத்தரவாதமளிக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

(50)

# வன்னியில் நடைபெறும் மோதல் காரணமாக அப்பாவிப் பொதுமக்களுக்கு பாதிப்பு அதிகம்

## யுத்த நிறுத்தத்துக்கு கனடா மீண்டும் வலியுறுத்தல்

ஒட்டாவா, மே 9

அரசாங்கப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் காரணமாக அப்பாவி பொதுமக்களே அதிகம் பாதிக்கப்படுவதாக கனடாவின் வெளிவிவகார அமைச்சர் லோரன்ஸ் கனோன் தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாகவே இலங்கையில் யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட வேண்டுமென தாம் வலியுறுத்தி வருவதாக அவர் குறிப்பட்டுள்ளார்.

வன்னியில் அல்லலுறும் அப்பாவிப் பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை தடையின்றி பூர்த்தி செய்யக் கூடிய ஓர் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மற்றும் முக்கிய நாடுகள் விடுத்த யுத்த நிறுத்த கோரிக்கையை இலங்கை ஜனாதிபதி நிராகரித்த சில மணித்தியாலங்களின் பின்னர் கனேடிய வெளிவிவகார அமைச்சர் லோரன்ஸ் கனோன் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். (50)

## மன்னார் வைத்தியசாலையிலிருந்து 61 பேர் நலன்புரி நிலையங்களுக்கு

கொழும்பு, மே 9

மன்னார் வைத்திய சலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த நோயாளர்களில் 61 பேர் நிவாரண கிராமங்களுக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

வன்னியில் இடம்பெற்றுவரும் மோதல்கள் காரணமாக காயமடைந்த மற்றும் நோயுற்றவர்களே குணமடைந்த நிலையில் நேற்று நிவாரணக்கிராமங்களுக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், இதுவரையில் மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நோயாளர்களில் 660 இற்கு அதிகமானோர் நிவாரணக் கிராமங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கு கனேடியப் புத்திஜீவிகள் ஆதரவு

மொன்றியல், மே 9

இலங்கையில் தமிழர்கள் நேர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு முடிவு கொண்டுவர கனடா அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்களின் சுயநிர்ணய உரிமைக்கு தாம் முழுமையான ஆதரவு வழங்குவதாகவும் கூறி கனேடியப் பிரதமர் ஸ்ரிபன் காப்பருக்கு அறிக்கை ஒன்றைக் கனேடிய புத்திஜீவிகள் அனுப்பியிருக்கிறார்கள். இவ்விடயம் கடந்த புதன்கிழமை ரொரன்ரோவில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

கனடாவின் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையே தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழியைத் தடுப்பதாகவும், தமிழர்களின் போராட்டம் 60 வருடங்களாக தொடர்ந்து கொண்டிருந்தும் ஊடகங்கள் கடந்த 30 வருடங்களை மட்டுமே குறிப்பிடுவதாகவும் இந்த ஊடக மாநாட்டில் குறிப்பிடப்பட்டது. முதல் 30 வருடங்கள் தமிழர்கள் அமைதிவழியே போராடிய போராட்டத்தை ஊடகங்கள் கருத்தில் கொள்ளவில்லை என்றும், தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கு முக்கியத்துவம் கொடுத்தே இப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்பதையும் கனேடியப் புத்திஜீவிகள் சுட்டிக்காட்டினர்.

கனேடிய பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்ட இவர்களின் அறிக்கையானது பல பல்கலைக்கழகங்களிலும் கல்விக்கூடங்களிலும் இருந்து வந்த 125 கல்வி நிபுணர்களால் கையொப்பமிடப்பட்டது குறிப்படத்தக்கது. (50)

## தென்மராட்சியில் சுயதொழில் கடன்

யாழ்ப்பாணம், மே 9

மந்துவில் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள 27 பயனாளிகளுக்கு தலா 40 ஆயிரம் ரூபா வீதம் சுயதொழில் முயற்சிகடன் வழங்கப் படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டப் பிரிவினர் மந்துவில் வடக்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக இந்த உதவியை வழங்கவுள்ளனர்.

மந்துவில் வடக்கு கிராம அபி விருத்திச் சங்க மண்டபத்தில் இடம் பெற்ற தொழில் வழிகாட்டல் பயிற்சி நெறியில், நிறுவன யாழ். மாவட்ட பொறுப்பதிகாரி நிஷாந்தன் இத்தகவலைத் தெரிவித்தார்.

அத்துடன் பிரிவில் உள்ள நெல் வயல் பாதுகாப்பு வேலிகள் அமைத்தல், விளையாட்டு அபிவிருத்தி போன்ற வேலைத் திட்டங்களும் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார்.

(50)

# வன்னியிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இதுவரை 1 லட்சத்து 87 ஆயிரத்து 840 பேர் வருகை

## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தகவல்

கொழும்பு, மே 9

வன்னியில் சிக்கியிருந்த 1 லட்சத்து 87 ஆயிரத்து 840 பேர் இது வரை அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வந்துள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் எஸ்.பி. திவாரத்ன தெரிவித்தார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சில் நேற்றுக் காலை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தகவல் தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பட்டார்.

இவர்களில் 41ஆயிரத்து 492 பேர் 20 நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளதுடன் ஏனையோர் நான்கு நலன்புரி கிராமங்களில் தங்கியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் 11ஆயிரத்து 150 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதுடன் புல்மோட்டையில் 5ஆயிரத்து663 பேர் தங்கியுள்ளனர்.

புலிகளிடம் தற்போது சிக்கியுள்ளவர்களின் எண்ணிக்கையைத் திட்டவட்டமாக் கூற முடியாவிடினும் மேலும் 20 ஆயிரம் பேர் புலிகளிடம் சிக்கியிருப்பதாக அரசாங்கம் உத்தேசிக்கின்றது. அவர்கள் எந்த நேரத்தில் வந்தாலும் அவர்களை தங்கவைக்க வலயம் நான்கின் ஆயிரம் ஏக்கர் காணியில் அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு லட்சம் பேர் வந்தாலும் அத்தனை பேரையும் தங்க வைக்க அரசு தயாராகவுள்ளது.

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வந்துள்ள மக்களுக்கு தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க சுகாதார அமைச்சு மிகப்பாரிய அளவிலான ஒரு சேவையை மேற்கொண்டு வருவதாகவும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 27 | 10.05.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | பிரதமை |
| | மு.ப. 10.44வரை |
| நட்சத்திரம்: | அனுஷம் |
| | பி.இ. 04.11வரை |
| சுபநேரம்: | 08.54 - 10.24 |
| ராகுகாலம்: | 04.524 - 05.54 |

## வட்டுக்கோட்டைப் பிரகடனத்தை உறுதிப்படுத்த நோர்வேயில் தமிழர்கள் நாளை வாக்குப் பதிவு

ஒஸ்லோ, மே 9

வட்டுக்கோட்டைப் பிரகடனத்தின் அடிப்படையில் ஈழத் தமிழர் தன்னாட்சியையும் இறைமையையும் மீள உறுதிப்படுத்த மக்களால் நடத்தப்படும் வாக்குப்பதிவு நாளை ஞாயிற்றுக்கிழமை நோர்வேயில் நடைபெறவுள்ளது.

நோர்வே வாழ் தமிழ மக்களின் தீர்ப்பைக் கணிக்கும் இம்முயற்சிக்கான ஒழுங்கமைப்பினை ஊத்துறூப் (www.utrop.no) எனப்படும் பக்கச் சார் பற்ற பல்லின பண்பாட்டு நோர்வேஜிய ஊடகம் முன்னெடுக்கின்றது.

இந்த வாக்குக் கணிப்பானது, பக்கச் சார்பற்ற மூன்றாம் தரப்பு நோர் வேஜிய நடுவர்களால் நடத்துப்படும் என ஊத்துறூப் இணைய நாளிதழ் மற்றும் அதன் வார இதழ் ஆசிரியர் மயூரன் விவேகானந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் தமிழர்களுக்கு தனிநாடே விடிவினைக் கொண்டு வரும் என்பதை உறுதியாய் கொண்டு நடத்தப்படும் வாக்குப்பதிவில் நோர்வே வாழ் தமிழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு வாக்களிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ஈழத் தமிழர் தன்னாட்சியையும் இறைமையையும் நோர்வே வாழ் மக்களின் தீர்ப்பால் மீள உறுதிப்படுத்துவோம். தனிநாட்டு உரிமைக்காகவும், நீதிக்காகவும், அவல வாழ்வில் இருந்து மீண்டு வரவும் ஒன்றிணைவோம்.

நாளாந்தம் ஈழத்தில் நம் தமிழ் உறவுகள் படும் துயர்நீக்க இணைந்திடுவோம்.

இறுதி நேரம் வரை காத்திராமல், முன்கூட்டியே வந்து வாக்களிப்பதன் மூலம் இறுதி நேர சிரமங்களைத் தவிர்க்க முடியும் என ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

நாளை ஞாயிற்றுக்கிழமை ஒஸ்லோ, போர்கன், துரொன்டெய்ம், ஸ்ரவங்கர், ஒக்சலன்ட் ஆகிய இடங்களில் இந்த வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிற்போடப்பட்டுள்ளது

### சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவித்தல் - 2009

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் நாளை (10.05.2009) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த ஆண்டுப் பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. பொதுக்கூட்ட நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி. செயலாளர்.

## 31 ம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 15 ★ 07 ★ 1947



மறைவு 10 ★ 04 ★ 2009

10.04.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம்

அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை (10.05.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

துரை வீதி, தாவடி வடக்கு,
கொக்குவில். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### நவரத்தினம் பாலகிருஷ்ணன்



உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் பாலகிருஷ்ணன் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி நவரத்தினம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருமதி. செல்வரத்தினம் பாலகிருஷ்ணனின் அன்புக் கணவரும், நந்தபாலன், சுகந்தினி, வண்மதி, தயாளினி, நந்தகுமார், ஆகியோரின் அன்புத் தந்தையும்,கமலேஸ்வரி அமிர்தலிங்கம், ஸ்ரீதரன், ஸ்ரீகாந், கொறச்சி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற லீலாவதி,பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(10.05.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று பி.ப. 12.30 மணிக்கு பொரளை கனத்தை பொது மயானத்தில் தகனக்கிரியை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பீட்டர்சன் வீதி, தகவல்:
கொழும்பு - 6. ம.ஸ்ரீதரன்.

### பொன்னர் முருகையா



தெல்லிப்பளை, துர்க்காபுரத்தைப் பிறப்பிடமாகவும் வயாவிளான் தெற்கை வசிப்பிடமாகவும் தற்போது கொத்தியாவத்தை, சுன்னாகத்தில் வசித்து வந்தவருமாகிய பொன்னர் முருகையா நேற்று (08.05.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர் வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - இலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக்கணவரும் ஜெகராஜாவின் அன்பு மைத்துனரும் ஸ்ரீகரன (கோண்டாவில்), தவரஞ்சினி, ஜெனகரன் (சுவிஸ்), மகாரஞ்சினி (லண்டன்), கிரிகரன் (சுவிஸ்), ஜீவரஞ்சினி(வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் முருகமூர்த்தி, ஸ்ரீஸ்கந்தராசா (லண்டன்), உதயபவான் (ஆசிரியர்), ரதிவதனா, மதிவதனா, துஷியா ஆகியோரின் அன்பு மாமனாரும் நிவேதிகா, கஜாகரன், கஜந்திகா, கோபாலராஜ, சரண்யா, அஜித்தா, விதுஷன், சுகன்யா, சஜீபன், அபினயா, ஜெறுசிகா, மதுணன், தர்சிகன், சைந்தவி, லோஜிதன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (09.05.2009) சனிக்கிழமை மு.ப 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரிகைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திறகு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ஸ்ரீகரன்
கொத்தியாவத்தை, சுன்னாகம். (மகன் ஸ்ரீ, கோண்டாவில்).

## ஆங்கிலமொழிப் பயிற்சி

மண்டுவில், மே 9

தென்மராட்சி கல்வி வலயத்தின் 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் ஆங்கிலமொழிப் பயிற்சிபெற்ற ஆங்கில ஆசிரியரல்லாதோருக்கான 10 நாள் பயிற்சித் திட்டத்தின் முதல் நாள் பட்டறைகள் இன்று சனி காலை 8.00 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(1-59)

## மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

யாழ்ப்பாணம்,மே 9

மாட்டுவண்டிச் சவாரி ரசிகர்களின் ஏற்பாட்டில் நீர்வேலி சவாரித்திடலில் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெறவுள்ளது. (9)

## வர்த்தகருக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம்,மே9

வர்த்தக நிலையப் பரிசோதனைக்குச் சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகரை கடமை செய்ய விடாமல் தடுத்ததாகக் கூறப்படும் வர்த்தகர் சாவகச்சேரி நீதிமன்றினால் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி நகரப் பகுதி உணவகத்தின் மீது பரிசோதனை நடத்த கடந்த 5 ஆம் திகதி சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகரை கடமை செய்ய விடாது தடுத்ததாக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கினை விசாரித்த நீதிவான் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை வர்த்தகரை விளக்க மறியலில் வர்த்தகரை வைக்கு மாறு உத்தரவிட்டார். (1-207)

## சித்திரா பௌர்ணமி விரதம் நேற்று அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், மே 9

சித்திரா பௌர்ணமி தினமான நேற்று இந்துக் கோவில்களில் காலை தொடக்கம் மதியம் வரை விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

தாயை இழந்தவர்கள் நேற்று விரதம் இருந்து மதிய உணவு உண்டனர்.

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயிலில் துர்க்காதுரந்தரி ஆற்றிய முருகனைப் பற்றிய பிரசங்கம் ஒலிபரப்பு செய்யப்பட்டது.

(1-51)

## தென்மராட்சி விபத்துக்களில் மூன்று பேர் காயம்

யாழ்ப்பாணம், மே 9

தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிக்கி மூன்று பெண்கள் காயமடைந்தனர்.

பெருங்குளம் பகுதியில் வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் தாயும் மகளும் காயமடைந்தனர்.

இதே இடத்தைச் சேர்ந்த ச.தயாளம் (வயது 55), ச.சங்கீதா (23) ஆகியோரும்.

மீசாலையில் மிதிவண்டியில் சென்ற பெண்ணை மோட்டார் சைக்கிள் மோதியதில் இதே இடத்தைச் சேர்ந்த எஸ்.நீலாம்பிகை (வயது53) என்பவரும் காயமடைந்தனர்.

இவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

(203-204)


### தேவை

அரைக்கும் ஆலை, மோட்டார் சைக்கிள் சுத்திகரிப்பு, ரயர் வேலை, ரீமேக்கர் என்பவற்றில் அனுபவம் உள்ளவர்களும் பயிலுனர்களும் தேவை.

தொடர்பு: ரிகுந்தா மில்ஸ், இல-18,றக்கா றோட், யாழ்ப்பாணம். Tele 9201

### விற்பனைக்குண்டு

மகோகனி, சப்பு, பலகை, தீராந்தி வகைகள் விற்பனைக்குண்டு.

ஸ்மிடம் 4X3,2X2,2X1, மற்றும் 8'',9'',10''. பலகை வகைகள் (பீடிங் மோல்டிங்) சகாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு-இல-194,k.k.s வீதி, யாழ்ப்பாணம்.
(கனகர் தெருப்பிள்ளையார் கோவில் முன்பாக)
T.P 0719134767, 0777073702.


### துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி

ஸ்ரீஞானவைரவர் ஆலய வளர்ச்சி நிதிக்காக நடத்தப்படும் யாழ். மாவட்ட ரீதியிலான ஆண்களுக்கான துவிச்சக்கரவண்டி ஓட்டப் போட்டி (10.05.2009) ஞாயிறு காலை 6.00 மணிக்கு நவாலி ஸ்ரீஞான வைரவர் ஆலய முன்றலில் ஆரம்பமாகும்.

நிர்வாக சபை

நவாலி தெற்கு ஸ்ரீஞானவைரவர் ஆலயம்.

## மரண அறிவித்தல்கள்

### தேசிங்கம் குணசிங்கம் (வவா)

(இளைப்பாறிய உத்தியோகத்தர், விமானப்படை)



கரம்பனைப் பிறப்பிடமாகவும், இல 44, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட தேசிங்கம் குணசிங்கம் கடந்த (05.05.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேசிங்கம்- அன்னக்கிளி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிட்டினு- இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், சிந்தாமணியின் அன்புக் கணவரும், துஷ்யந்தி (தேசிய சேமிப்பு வங்கி, சாவகச்சேரி), ஜெயந்தி (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் அருளானந்தம் (முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்), மனோராஜா (நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும் அருஜுனா (சென். ஜோன்ஸ் கல்லூரி), கானாமிர்தன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), கார்த்திகேயன் (நியூசிலாந்து), தாரகா (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான குருநாதன், தங்கராசா, நடராசமணி, தங்கமணி மற்றும் ஜெயமணி, சுதந்திரதேவி, இராசசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல44, சோமசுந்தரம் அவெனியூ, தகவல்:
சுண்டிக்குளி. வி. அருளானந்தம்
T.P.No 0212225944 (84931) (மருமகன்).

### திருமதி இரத்தினபூபதி தங்கராஜா

(சங்கானை - யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம், சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கனடா ரொறொன்ரோவில் வசித்து வந்தவருமான திருமதி இரத்தின பூபதி தங்கராஜா 05.05.2009 செவ்வாய்க் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராஜாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற சின்னையா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, பத்மராஜா ஆகியோரின் அருமைச் சகோதரியும், பவானி, சுகந்தினி, ஜேர்மனியில் வசிக்கும் ரவீந்திரன், பாஸ்கரன், வசந்தினி, கனடாவில் வசிக்கும் ஜெயந்தினி, சாந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், உதயகுமார், சுதாகரன், சுகந்தி, ரஜனி, தேவகுருபரன், சண்முகநாதன், தயாபரன் ஆகியோரின் அன்பு மாமியும் நிதர்ஷா, கானப்பிரியா, நித்யா, தஷ்யா, அபிஷியா, சாயீசன், பிரவீசன், சாருகா, ஜதார்த்தன், சண்ஜீவி, ரவீனா, சாருஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.05.2009 திங்கட்கிழமை ரொறொன்ரோ, கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தயாபரன், சண்முகநாதன்
(மருமக்கள்)
பவானி, சுகந்தினி (மக்கள்).

### தேவசகாயம் அந்தோனிப்பிள்ளை

(உரிமையாளர், D.A. பிள்ளை அன் சன்ஸ்)



உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் பாஷையூரை வசிப்பிடமாகவும் கொண்ட தேவசகாயம் அந்தோனிப்பிள்ளை (D.A. பிள்ளை - டீஸல்ராசா) 03.05.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேவசகாயம் - அன்னப்பிள்ளை தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் செலினின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் சாந்தி (கனடா), எலிஸரன் (கனடா), ஜெயந்தி (ஜேர்மனி), அனிஸ்ரன் (கனடா), வசந்தி (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (09.05.2009) சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு அன்னாரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியின் பின் யாழ்.புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

59, முதலாம் குறுக்குத்தெரு, தகவல்:
பாஷையூர், யாழ்ப்பாணம். மனைவி, மக்கள்,
தொலைபேசி0212222032 மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு எதிரான போரை ஆரம்பித்திருக்காதிருந்தால் அவர்கள் இப்போது ஈழத்தை உருவாக்கியிருப்பார்கள்

## கோத்தபாய சொல்கிறார்

கொழும்பு மே 9

விடுதலைப்புலிகளுக்கெதிராக மனிதாபிமானப் போரை அரசு ஆரம்பித்திருக்காதிருந்தால், அவர்கள் இப்போது ஈழத்தை உருவாக்கியிருப்பார்கள். இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.



கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

விடுதலைப்புலிகளுக்கு எதிராக வன்னியில் மனிதாபிமானப் போர் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமல் இருந்திருந்தால் வெகுவிரைவில் அவ்வமைப்பினர் தனியொரு ஈழ இராச்சியத்தை உருவாக்கியிருப்பார்கள். எனினும் படையினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்த மனிதாபிமானப் போர் நடவடிக்கைகளால் நாட்டைப் பிளவுபடுத்தும் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இராணுவ வீரர்கள் வழங்கிய ஆதரவு மகத்தானதாகும்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றபோது விடுதலைப்புலி உறுப்பினர்கள் வலுவான நிலையில் அப்பகுதியை நிர்வகித்து வந்தனர். இந்நிலையிலேயே அவர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் பயங்கரவாத நடவடிக்கைகளை முற்றாகத் தோற்கடித்து ஜனநாயகத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற உறுதியான இலட்சியத்துடன் ஜனாதிபதி செயற்பட்டார்.

இதற்காக உரியவர்களை பொருத்தமான பதவிகளுக்கு நியமித்தமை முக்கியமான அம்சமாகும். இருப்பினும் ஜனாதிபதியின் இந்த முயற்சிகளை முறியடிக்கும் வகையில் சில அமைப்புக்களும், சக்திகளும் பல்வேறு பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வந்தனர், வருகின்றனர். எனினும் அவர்களின் பொய் பிரசாரங்களுக்கு ஏமாறாமல் பொது மக்கள் அனைவரும் நம்பிக்கையுடன் செயற்பட வேண்டும். இதேவேளை மனிதாபிமான போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் இராணுவத்தின் மனிதநேய சட்ட திட்ட[illegible] பேணுவதன் மூலம் பொதுமக்களுட[illegible] நெருங்கிய தொடர்பினை பேணி வருகின்றார்கள்- என்றார். (அ-1)



யாழ்.நகர்மைய றோட்டரக்ட் கழகமும் யாழ்.றோட்டரிக் கழகமும் இணைந்து உரும்பிராய் இலக்குமி முன்பள்ளிக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களையும் விளையாட்டு உபகரணங்களையும் அண்மையில் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.

## வன்னியில் செவ்வாய், புதன் கிழமைகளில் 162 பொதுமக்கள் பலி! 251 பேர் காயம்!!

கொழும்பு, மே 9

வன்னியில் கடந்த புதன்கிழமை 48 மணி நேரத்துக்குள் 162 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 251 பேர் காயமடைந்துள்ளர் என இணையத்தள செய்திகள் தெரிவிக்கின்றன. அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

படையினரின் கடுமையான தாக்குதல்களால் தொடர்ச்சியாக பதுங்கு குழிகளில் அடைக்கலம் புகுந்துள்ள மக்கள் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது அல்லல்பட்டு வருகின்றனர்.

கடந்த புதன், வியாழக்கிழமைகளில் படையினர் மேற்கொண்ட வான் தாக்குதல், பல்குழல் எறிகணை, துப்பாக்கிச் சூடு என்பவற்றில் அப்பாவிப் பொதுமக்கள் 162 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

புதன் கிழமை காலை 11.25 முதல் நண்பகல் 12.15 வரையான குறுகிய நேர இடைவெளியில் முள்ளிவாய்க்கால் பகுதியில் 6தடவைகளுக்கு மேல் படையினர் குண்டுகளை மழையெனப் பொழிந்து வான் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதல்களில் பொதுமக்கள் 84 பேர் உடல் சிதறியும், உடல் கருகியும் அகோரமாகக் கொல்லப்பட்டதுடன் மேலும் 37 பேர் படுகாயமடைந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மட்டும் முள்ளிவாய்க்கால் பகுதி மீது ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பீரங்கிக் கணைகளும், கொத்துக் குண்டுகளும் மழையெனப் பொழியப்பட்டதில் 78 பொது மக்கள் பலியானதுடன் 214 பேர் படுகாயமடைந்தனர்.

பாதுகாப்பு வலயம் மீதான சிறிலங்காப் படையினரது இவ்வாறன கொடூர தாக்குதலின் போது அங்கிருந்து 20 திற்கு மேற்பட்ட தறப்பாள் வீடுகளும், 14 ஊர்திகளும் எரிந்து நாசமாகியுள்ளன.

ஊர்தி ஒன்றின் மீது குண்டுகள் வீழ்ந்து வெடித்ததில் அதன் கீழ் அடைக்கலம் புகுந்திருந்த 14 பேர் அந்த இடத்திலேயே உடல் கருகிப் பலியாகியிருந்தனர் என்றுள்ளது. (50)

## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், மே 9

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன விளையாட்டுக்கழகத்தின் 19 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், வருடாந்தப் பொதுக்கூட்டமும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு 16/2, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடைபெறவுள்ளன. (204)

## அனுமதிப்பத்திரமின்றி கள் வைத்திருந்த நால்வருக்கு அபராதம்

யாழ்ப்பாணம் மே 9

வீடுகளில் அனுமதிப் பத்திரம் இன்றி கள் வைத்திருந்த நால்வருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினர் சாவகச்சேரி கெருடாவில், கல்வயல், மீசாலை கிழக்கு ஆகிய பகுதிகளில் நடத்திய திடீர் பரிசோதனையின்போது அகப்பட்ட இவர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்குகளை விசாரித்த நீதிவான் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து செலுத்தத் தவறின் தலா ஐந்து மாதம் வீதம் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

மதுவரித் திணைக்களத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட கசிப்பு வைத்திருந்த வழக்குகள் விசாரிக்கப்பட்டபோது சாவகச்சேரி சிவன் கோவிலடி, கெருடாவில், மட்டுவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூவரையும் எதிர்வரும் பதினைந்தாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (203-207)

## யோகாசன வகுப்பு

யாழ்ப்பாணம், மே 9

யாழ். சிவானந்த மகரிஷி யோக நிலையத்தில் யோகாசன வகுப்பு ஆரம்பமாகவுள்ளது.

இந்த வகுப்பு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு வேதாந்த மட தியானமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சியில் கலந்து கொள்வோர் மேற்படி மண்டபத்தில் பதிவுகளை மேற்கொண்டு பயிற்சியில் ஈடுபடலாம் என கூறப்பட்டுள்ளது. (204)

## கோழிகளுக்கான உணவு

யாழ்ப்பாணம், மே.9

சாவகச்சேரி கால்நடை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினர் முட்டையிடும் கோழி உணவு குறைந்த விலையில் விற்பனை செய்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

50 கிலோ நிறையுடைய லேயர் ரக கோழி உணவு 2 ஆயிரத்து 950 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-207)

## விவசாய திணைக்கள ஊழியரை காணவில்லை

யாழ்ப்பாணம், மே 8

கொடிகாமம் விவசாய விரிவாக்கல் நிலையத்தில் பணிபுரியும் ஊழியரை கடந்த 30 ஆம் திகதி முதல் காணவில்லை என அவரது மனைவி மனிதஉரிமைகள் ஆணைக்குழு யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கோப்பாய் தெற்கு, பழைய வீதியை சேர்ந்த ராஜ்ரத்தினம் முருகமூர்த்தி (வயது 35) என்பவரையே காணவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 30 ஆம் திகதி நல்லூருக்கும் கோப்பாய்க்கும் இடையிலேயே இவர் காணாமற் போயுள்ளார் என அவரது மனைவி முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (1-25)

## கோழிக்குஞ்சுகள் விநியோக[illegible]

யாழ்ப்பாணம், [illegible]

சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்தினால் கோழிக்குஞ்சுகள், காடைக் குஞ்சுகள், வான்கோழிக் கு[illegible]கள் ஆகியவை பண்ணை[illegible]ாளர்களுக்[illegible]ந்தம் வி[illegible]யோகிக்கப்படவுள்ள[illegible]

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் உற்பத்தி செய்[illegible]படும் [illegible]ாழிக்குஞ்சுகள் காடைக் குஞ்சுகள், வான்கோழிக் குஞ்சுகள் ஆகியவையே விநியோகிக்கப்படவுள்ளன.

பண்ணையாளர்கள் மாதாந்தம் தமக்குத் தேவையான குஞ்சுகளின் விவரத்தினை கால்நடை வைத்தி[illegible] அலுவலகத்தில் பதிவு செய்[illegible]மாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)

## சாரணர் கப்போரி இன்று இடம்பெறாது

யாழ்ப்பாணம், மே 9

வடமாகாண குருளைச் சாரணர் கப்போரி 5ம் ஆண்டு மாதிரிப் புலமைப் பரீட்சை காரணமாக இன்று சனிக்கிழமை நடைபெறமாட்டாது என்று வடமாகாண ஆணையாளர் ரி.என்.போஜன் தெரிவித்துள்ளார்.

இந்தக் குருளைச் சாரணர் கப்போரி எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

கலைக்கூறு 1 பயிற்சிக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (204)

## குருஜியின் அவதார தினத்தை முன்னிட்டு இரத்ததானம்

யாழ்ப்பாணம், மே 9

ஆன்மீக குருவும் வாழும் கலை ஸ்தாபகருமான ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜியின் 53 ஆவது அவதார தினத்தை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் இரத்ததான நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அண்மையில் பயிற்சிபெற்ற இணுவில், வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளைச் சேர்ந்த வாழும் கலை அங்கத்தவர்கள் உட்பட பலர் இந்த முகாமில் கலந்து கொள்வர். (203)

## சமுர்த்தி விநியோக வழங்கற் கட்டளைகள்

யாழ்ப்பாணம், மே 9

ஏப்ரல், மே மாதங்களுக்குரிய சமுர்த்தி நிவாரணப் பொருள்களுக்கான வழங்கற் கட்டளைகளை சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் பெற்று பொருள்களை களஞ்சியங்களிலிருந்து உடனடியாகப் பெற்றுக் கொள்ளுமாறு அரச அதிபர் க.கணேஷ் கேட்டுள்ளார்.

நிவாரண விநியோகத்திற்கென சிவப்பு நாட்டரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு ஆகிய பொருள்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மேலும் அவர் தெரிவித்தார். (1-7)

## கால் நடைகள் கொள்வனவு

சாவகச்சேரி கால்நடை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் நான்கு மாதம் வரையான கோழி குஞ்சுகள், மாடுகள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்து பிரதேச மக்களுக்கு விநியோகிக்கவுள்ளனர்.

ஒரு மாதம் தொடக்கம் 4 மாதம் வரையிலான கோழிக் குஞ்சுகள், மாடுகள் வைத்திருப்போர் சங்க அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சங்கத்தின் பால் விற்பனை அதிகரித்ததையடுத்து பால் கொள்வனவும் இடம்பெறுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)



அரியாலை கலைமகள் சனசமூக நிலையம் அமரர் தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கத்தின் ஞாபகார்த்தமாக உலக நாடக தினத்தை அண்மையில் நடத்தியது.

இவரது நினைவாக திருமதி கமலாதேவி பஞ்சலிங்கம் மரக்கன்றுகள் வழங்குவதையும் நிலையத் தலைவர் இ.மதிகரன், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் த.கலாமணி ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




லண்டனில் வசிக்கும்
**மில்கன்-டோட்டி**
தம்பதியின் செல்வப் புதல்வன்
***மைக்றீமன்***

தனது முதலாவது பிறந்த நாளை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் இன்று (09.05.2009) சனிக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அம்மப்பா,அம்மம்மா, பெரியம்மா மற்றும் உற்றார், உறவினர் இறைவனின் அருள் பெற்றுச் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

*வாழ்த்துவோர்:*
**அம்மப்பா, அம்மம்மா, பெரியம்மா.**
*யாழ்ப்பாணம்.*

(84993)




# வன்னியிலிருந்து இடம்பெயர்ந்தோருக்கு உதவ தெற்கிலிருந்து வைத்தியர்கள் அனுப்பிவைப்பு

## சபையில் சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 09

மோதல்கள் காரணமாக வடக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்குத் தேவையான சிகிச்சைகளை வழங்குவதற்காக 268 வைத்தியர்களும் 500 தாதியரும் வடக்குப் பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கூறியவை வருமாறு :-

உள்நாட்டில் பற்றாக்குறையாக உள்ள துறைகளுக்கே வெளி நாடுகளிலிருந்து வைத்தியர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இலங்கை வைத்தியர்கள் சபையில் தற்காலிகப் பதிவை மேற்கொண்டுள்ளார்களா என்பதைக் கண்டறிய அரசு கவனம் செலுத்துகின்றது.

அத்துடன் சுகாதார சேவைகளுக்காக வடக்குக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள உபகரணங்கள் உரிய இடங்களுக்குச் சென்றடைந்துள்ளனவா என்பதையும் அரசு உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. அறுவைச் சிகிச்சைக்காக அரசு வைத்தியசாலைகளில் நிலவும் நெருக்கடியை நீக்கும் வகையில் சுகாதார அமைச்சின் செலவில் 30 நோயாளிகள் ஸ்ரீஜெயவர்த்தனபுர வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கொழும்பு சிறுவர் வைத்தியசாலையில் 60 கோடி ரூபா செலவில் அறுவைச் சிகிச்சை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (சி)

# வன்னி மக்கள் துயர் துடைப்பு செயற்பாட்டுக் குழுவினர் பொது அமைப்பு பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினர்

வன்னி மக்கள் துயர் துடைக்க அமைக்கப்பட்ட குழுவின் பிரதிநிதிகள் வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

இது தொடர்பாக அந்தக் குழு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வன்னியில் இருந்துஇடம்பெயர்ந்து எமது பகுதிகளில் தஞ்சமடைந்துள்ள மக்களின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு சமூகசேவைகள், சமூகநலத்துறை அமைச்சரின் ஆலோசனை வழிகாட்டலுக்கு இணங்க உருவாக்கப்பட்ட 'வன்னி மக்கள் துயர் துடைப்பு செயற்பாட்டுக் குழு' தனது ஆரம்ப நடவடிக்கையாக யாழ் மாவட்டத்தில் உள்ள வெகுஜன அமைப்புக்களுடனான கலந்துரையாடலை மேற்கொண்டது. இதனடிப்படையில் பனை, தென்னை வள கூட்டுறவு சங்கங்களின் சமாசம், யாழ். மாவட்ட பாரவூர்தி சங்கம், யாழ் மாவட்டத் தனியார் சிற்றூர்தி சங்கம், யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம், யாழ் நகர முச்சக்கரவண்டி களின் சங்கம் , மற்றும் வகுப்புத் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றுடனான கலந்துரையாடலை நேற்று முன்தினம் செயற்பாட்டுக் குழுவின் காரியாலயத்தில் நடைபெற்றது. இதன் போது அனைத்து சங்கங்களும் தாம் தமது உறவுகளுக்கு உதவ பேரார்வத் துடன் இருப்பதாக தெரிவித்தனர். அத்தோடு தங்களாலான உதவிகளை எமது செயற்பாட்டுக் குழுவினுடாக வழங்குவதாகவும் உறுதியளித்திருந்தனர்.


இக்கலந்துரையாடலில் வன்னி மக்கள் துயர் துடைப்பு செயற்பாட்டுக் குழுவின் தலைவர் மு.சிறீபதி , உபதலைவர் க.தெய்வேந்திரம், செயலாளர் இ. அகிலன், ஊடக இணைப்பாளர் இ.சதீஸ், காப்பாளர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்-என்றுள்ளது. (1)


## காணி தேவை

**கல்லு உடைக்கும் ஆலை (கிரசர்)அமைப்பதற்கு உரும்பிராய், கோப்பாய், ராசவீதி, சுன்னாகம், புத்தூர், அச்சுவேலி ஆகிய இடங்களில் குறைந்த விலையில் 2-5 பரப்புக் காணி தேவை. ஒரு கிலோ மீற்றருக்குள் மின்சார வசதி (3phase) விரும்பத்தக்கது.**

**Tel: 0041325444333**
**Mobile: 0041783029130 (SMS)**


## சேவை நலன் பாராட்டும் பிறந்த நாள் வாழ்த்துக்களும்



## திரு. மார்க்கண்டு சண்முகரத்தினம்

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியராக 40 வருடங்கள் சேவையாற்றி ஓய்வுபெறும் எமது குடும்பத் தலைவர் திரு. மார்க்கண்டு சண்முகரத்தினம் அவர்களை அவரது பிறந்த தினமான இன்று (09.05.2009) மனமகிழ்வுடன் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ ஈழத்துச் சிதரம்பரப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

S.M.கேணியடி,
புதுறோட், காரைநகர்.

வாழ்த்துவோர்:-
**குடும்பத்தினர்.**

## வியாபார உரிமத்தைப் பெறுமாறு அறிவுறுத்து

சங்கானை மே 9

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட வியாபார நிலையங்கள், உணவகங்கள் மற்றும் தொழில் நிலையங்கள் 2009ஆம் வருட வியாபார உரிமத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு சபையின் செயலாளர் சு. புத்திசிகாமணி கேட்டுள்ளார். வியாபார உரிமைப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளாத நிலையங்களுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும். எனவும் அவர் அறிவித்துள்ளார். (203-29)


## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர்.


## ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் கந்தையா மகாதேவன்

மண்ணில்: 13*03*1943 விண்ணில்: 21*04*2008

அன்போடும் பண்போடும் எம்முடன்
வாழ்ந்த நீங்கள்
ஆண்டவனின் திருவடி சேர்ந்ததேனோ
எமைவிட்டு
ஆறாத்துயருடன் தேடுகின்றோம் உங்கள்
இன் முகத்திற்காய்
ஆறுதல் தருவது உங்கள் திருவுருவப் படம்தான்
உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போர்.

**அன்பு மாமி-வி.மகேஸ்வரி,**
**உடன்பிறவாத் தம்பி-கு.தர்மராசா,**
**மைத்துனி-த.விஜியேந்திரி,**
**பேரப்பிள்ளைகள் ... .**
84/6, தபாற்கந்தோர் லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

## ஆசிரியர் கலாசாலையில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம் மே.9

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 2006-2007 ஆம் ஆண்டுகளில் பயிற்சிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்குக் கலாசாலையில் நடைபெறவுள்ளது. (204)


## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
## The Jaffna Education Centre

"நாதன்ஸ்" சினிமா முன்பாக (மேல்மாடியில்)

**Spoken English With Grammar;**
**சிங்களம்**
**Shorthand Typing** ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலம் கற்பிக்கப்படுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம்:- இன்று (09.05.2009) சனிக்கிழமை "வெளிநாடு" செல்பவர்களுக்கு எழுத, வாசிக்க, பேச இலகுவான முறையில் கற்றுக் கொடுக்கப்படும். பாடமுடிவில் "சான்றிதழ்" வழங்கப்படும்.

*நிர்வாகி:- இ.லோகநாயகி.*


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## எலிசபெத் நேசம்மா செல்லத்துரை

பிறப்பு:15*04*1923 இறப்பு:09*05*2008

அன்புள்ளம் கொண்ட தாயே-நீங்கள்
மறைந்து ஆண்டு ஒன்று
ஆனாலும் உங்கள் பாச முகத்தை
எப்படி மறப்போம்.

வெகுவிரைவில்-ஐயாவிடம்
சென்று விட்டீர்கள்
பல ஆண்டு ஆனாலும் உங்கள்
நினைவுகள் எங்களை விட்டு
நீங்கி விடமாட்டா.

**பாசமுள்ள பிள்ளைகள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

NO.33(19), Colombogam Road,
Chundikuli, Jaffna.

(84975)

## யாழ்ப்பாண சுதேச மருத்துவ மாநாடும் கண்காட்சியும்
## லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி
## 2009

1ஆம் அமர்வு நோய்கள்
இன்று (09.05.2009) சனிக்கிழமை 9.00-11.45வரை

**தலைமையுரை**
Dr.S.பரமசிவம்பிள்ளை DAM (ஓய்வுபெற்ற அரச சித்த வைத்திய அதிகாரி Grade II)
(உப செயலாளர், வட இலங்கை சுதேச மருத்துவசபை-பரம்பரை சித்தவைத்தியர்)

**பிரதம விருந்தினர் உரை**
உயர்திரு.அ.சுந்தரலிங்கம்
(MLT-மெடிகுயிக் ஆய்வுகூடம்)
Dr.A.ஜெயகுமரன் MD(SMO)
(பொது வைத்திய நிபுணர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை)

**சிறப்பு விருந்தினர் உரை**
Dr.திருமதி ச.அருமைநாயகம் DAM (SL)
(ஓய்வுபெற்ற அரச சித்த வைத்திய அதிகாரி)
Dr.ஸ்ரீதரன் BSMS (SL) MPhill
"குன்மரோக குறிகுணங்களில் உள்ளிக்குளிகையின் செயற்றிறனை மதிப்பிடல்"
எனும் ஆய்வுக் கட்டுரையை வழங்குபவர்
Dr.சு.ஸ்ரீதரன் BSMS (SL) MPhill (Jaffna)
Dr.திருமதி சாந்தினி செல்வராசா (DAM) (உப அதிபர், ல.சி.ஆ.ம.க)
கருத்துரைகள்

**நன்றியுரை**
Dr.S.T.சண்முகராஜா (DAM) (ஓய்வுபெற்ற அரச சித்த வைத்திய அதிகாரி Grade II)
(உபதலைவர், வட இலங்கை சுதேச மருத்துவ சபை-பரம்பரை சித்த வைத்தியர்)

வட இலங்கை சுதேச மருத்துவசபை. **உப செயலாளர்.**

(84971)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 10ஆவது ஆண்டு நிறைவினையொட்டி சமய வழிபாட்டுடன் நடைபெற்ற நிகழ்வில் கல்வியியல் ஆய்வாளரும் எழுத்தாளருமான பா.தனபாலன், எழுதிய ''நவீன கற்றல் கற்பித்தல் முறையியல்கள்' என்ற நூலை கல்லூரியின் வித்தக விநாயகர் ஆலய பிரதமகுரு சிவானந்த சிவாச்சாரியார் வெளியிட்டு வைக்க கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் பெற்றுக்கொள்வதையும் -

அந்நூலாசிரியரின் மற்றுமொரு நூலான '' நவீன பாலர் கல்விச் செல்நெறிகள்'' என்ற நூலை கிறிஸ்தவ மன்ற பொறுப்பு விரிவுரையாளர் திருமதி ப.மரிய தாஸ் வெளியிட்டு வைக்க கிறிஸ் தவ மன்றத் தலைவி எஸ்.சோபிதா பெற்றுக் கொள்வதையும் கல்வியியலாளர் இ.கமலநாதன், த.சிவகுமார் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம். (9)

# வன்முறைகளுக்கு ஆளாகும் பெண்களுக்கு விழிப்புணர்வையும் சட்ட உதவியையும் வழங்க வேண்டியது காலத்தின் தேவையாகும்

இன்றைய காலகட்டத்தில் யுத்த சூழ் நிலைகளாலும் சமுதாய நெருக்கடிக ளாலும் பாதிக்கப்படுவது பெண்களே. ஆண்களுக்கு சரிநிகர் சமமாக வளர்ச்சி யுறுவதற்கு சமுதாயம் அனுமதிப்பதில்லை. ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே ஒற்றுமையை வளர்க்காமல் வித்தியாசங் களை உருவாக்குவதிலேயே சமூகம் தீவி ரமாக இருக்கிறது. ஆண்பிள்ளைகளை யும் பெண்பிள்ளைகளையும் வித்தியாச மாக வளர்ப்பதிலேயே அவர்கள் செல்லும் பாதை வேறு வேறாகப் பிரிந்திருக்கிறது.

இத்தகைய சமத்துவமின்மையே ஆணுக் கும் பெண்ணுக்குமிடையே பல அழுத் தங்களையும் பிரச்சனைகளையும் உரு வாக்க காரணமாக அமைகிறது.

உலகம் முழுவதும் காணப்படும் சமூ கப் பால் நிலைவேறுபாடுகள் ஆணாதிக் கத்தை அடிப்படையாகக் கொண்டிருப் பதால் நம் மத்தியில் பெண்கள் இடர் பாடுகளுக்கும் பாரபட்சங்களுக்கும் வன் முறைகளுக்கும் முகம் கொடுக்கின்றனர்.

இவ் வன்முறைகளானது குடும்பப் பெண்கள் மீதான இல்லத்து வன்முறை களாகவும் பாலியல் துஸ்பிரயோகமாகவும் வெடித்து மன அழுத்தங்களைத் தாங்கமுடி யாதவர்களாக மாற்றி சித்தப்பிரமை பிடித் தவர்களாகவும் உருக்குலைக்கின்றது.

இதனால் அவர்களின் குடும்பத்தில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டு அவர்களின் பிள்ளைகளின் எதிர்காலம் நிர்க்கதியாக வும் கேள்விக்குறியாகவும் மிஞ்சி நிற்கிறது.

பெண்களுக்கான சட்டங்கள் பல இயற்றப்பட்டிருந்தாலும் படித்த பெண் களால் அதை நடைமுறைப்படுத்தவோ படிப்பறிவற்ற கிராமப்புறப் பெண்களால் அதைப்பற்றி பூரண விழிப்புணர்வைப் பெற்றுக் கொள்ளவோ முடியாதுள்ளது.

நம் கண்முன்னே பெற்ற தந்தையா லும், ஒன்று விட்ட சகோதரனாலும், அய லவர்களாலும், நெருங்கிய நண்பர்களா லும் வேலை செய்யுமிடத்தில் மேலதி காரிகளாலும் சொல்ல முடியாத துன்பங்க ளுக்கு ஆளாகிவரும் பெண்கள் பயத்தி னாலோ, சுயகௌரவத்தின் காரணமா கவோ தமக்கு ஏற்பட்ட அவமானங்களை வெளிப்படையாகச் சொல்வதனால் சமூகத் தின் பார்வையில் ஒதுக்கி வைக்கப்படுகின் றனர். இதனால் தமக்கு இழைக்கப்படும் அநீ திகளை வெளிப்படுத்த முன்வருவதில்லை.

இத்தகைய பல்வேறுபட்ட சூழ்நிலை களால் பாதிக்கப்படும் பெண்களை உள வளத்துறை ஆற்றுப்படுத்தல் மூலமும் சட்டத்தின் மூலம் கிடைக்கக் கூடிய வாழ் வாதாரத் திட்டங்களையும் சுயதொழில் பயிற்சிகளையும் சுயதொழில் கடன்க ளையும் இலவச சட்ட ஆலோசனைகளை யும் வழி நடத்தல்களையும் சட்ட நிபுணர் கள் மூலம் தமது சேவைகளில் ஒன்றாக முன்னுரிமைப்படுத்தி பெண்களுக்கென பல வருடங்களாக தொடர்ந்து பணி யாற்றி வருகிறது.

இத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட பல பெண்கள் சட்ட உதவிகளைப் பெற்று பெண் தலைமைத்துவம் மிக்க துணிச்ச லுள்ள பெண்களாகவும் வலுப்படுத்தப் பட்டு வருகின்றனர்.

இத் திட்டத்தின் மூலம் மேலும் பல பெண்கள் பயன் பெற முடியும் எனவும் இந் நிறுவனம் உதவிக்கரம் நீட்ட காத்திருக் கிறது. வன்முறையால் பாதிக்கப்பட்டு முறைப்பாடு செய்யவரும் பெண்களி னால் கூறப்படும் சம்பவங்களும் பெறப்ப டும் தகவல்களும் எம் நிறுவனத்தால் பாதுகாப்பாகப் பேணப்படும்.

**மகளிர் அபிவிருத்தி நிலையம்,**
***யாழ்ப்பாணம்.***

## லண்டனிலுள்ள சீனத் தூதரகம் ஈழத் தமிழர்களால் தாக்கப்பட்டது!

லண்டன்,மே 09

லண்டனிலுள்ள சீன தூதரகம் மீது நேற்று முன்தினம் [illegible]லை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் யுத்த நடவடிக் கைகளைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்திவரும் ஈழத் தமிழர்களின் ஒரு தொகுதியினரே, இலங்கையரசுக்கு சீனா வழங்கிவரும் ஆயுத உதவிகளைக் கண்டிக்கும் முகமாக சீன தூதரகத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் குறித்த தூதரகத்துக்குள் புகுந்த சுமார் 150 பேர் அங்கிருந்த கண்ணாடிகளையும் தளபாடங்களையும் அடித்து உடைத்துச் சேதப்படுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தத் தாக்குதல் தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட் டனர். (அ)

## புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை

மண்டுவில், மே.9

தென்மராட்சி கல்வி வலயப் பாட சாலைகளில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கான முதலாவது பயிற்சிப் பரீட்சை இன்று சனிக்கிழமை நடை பெறவுள்ளது.

இதற்கான வினாப்பத்திரங்களை பின் வரும் நிலையங்களில் பெற்று பரீட் சையை நடத்தும்படி கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

வரணி மகாவித்தியாலய மத்திய நிலை யம், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியா லயம், வலயப்பணிமனை, கைதடி முத்துக் குமாரசாமி மகாவித்தியாலயம். (203-59)

# புவியியற் கல்விக்கு பாடப்புத்தகங்களை ஆக்கி வழங்கிய ஆசான்

## க.தியாகராசா

ஓர் எழுத்தாளர், படைப்பாளி ஒரு நாட் டின் பொதுச் சொத்தாகின்றான். ஒரு கல்வி யியலாளன் சமூக மேம்பாட்டாளன். எம் மொழியில் இவை ஆக்கப்படுகின்றவோ அம்மொழிக்கு வளம் சேர்க்கப்படுகின் றது. அம்மொழி வளர்ச்சி அடைகின்றது. படைப்பு பாடப்புத்தகமாக அமையும் போது சமூக உற்பத்தியாளனாகின்றான். தேசியக் கல்விக் கொள்கையில் பாட விதா னத்தின் ஓர் அலகை தயார் செய்கின்றவ னாகின்றான். இந்த வகையில் பிற மொழி களிலிருந்து மொழி பெயர்ப்பனவாக வன்றி பிற நூல்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட வெறும் உண்மையின் தொகுப்பாகவன்றி ஆராய்வு, ஆற்றல், அனுபவத் தேடலின் வெளிப்பாடக கருத்தேற்றத்தில் சிறிதும் பிசகாது புவி சம்பந்தப்பட்ட பௌதீக தகவல்களை கால மாற்றத்திற்கு ஏற்ற நிலமைகளை தமிழ் இளம் சந்ததியினருக்கும் ஆசி ரியர்களை வான்மையாளராக்க தமிழ்மொழி யில் எழுதி தானே அச்சேற்றி புத்தக வடி வம் கொடுத்து புவியியற் கல்வி கற்றவர் களை பூரண அறிவுடையவராக நிகழச் செய்த புவியியல் ஆசான்களில் அமரர் த. தியாகராசா முன்வைக்கத்தக்கவர் என் பதை மறுப்பதற்கில்லை.

1963 காலப் பகுதியினைத் தொடர்ந்து கீழ் வகுப்புக்களிலும் உயர் வகுப்புகளி லும் புவியியற் பாடத்தை மூலை முடக்கு எங்கும் உள்ள பாடசாலைகளில் தமிழ் மொழி மூலம் கற்கின்ற கலாசாரம் பரவத் தொடங்கியது. புவியியலைக் கற்பதற்கு ஏற்ற நூல்கள் தமிழ் மொழியில் அதிகமாக வெளிவரவில்லை. புத்தகப் பஞ்சம் பெரிய தொரு குறைபாடாகவிருந்தது.

இவ்வாறான சமூகத் தேவை இருந்த வேளையில் பதுளை சென்பேட் கல்லூரி யில் ஆங்கிலமும் புவியியலை தமிழில் கற்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட போதுதான் இவரால் (1963) பாடப்புத்தக ஆக்கம் ஆரம்பிக்கப்பட்டது. 1964 இல் கண்டி உயர்தர மகளிர் பாடசாலையில் கற் பிக்கின்றபோது சொந்தச் செலவில் அச் சகம் அமைத்து புவியற் புத்தகங்களை வெளியீடு செய்யலானார். சுமார் 45 வரு டங்களுக்கு முன்னர் வசதியற்ற காலத் தில் படவேலைகள் நிறைந்த புவியியற் பாடப் புத்தகங்களை தமிழில் தயார் செய்தமை நாவலர் பணிக்குப் பின்பு தனிமனிதர் ஒருவரின் தமிழ்த் தொண் டும் மொழி வளர்ச்சிக்கான சேவை எனக் கொள்ளலாம். யாழ்ப்பாணத்தவர்கள் படித் தவர்கள், முயற்சியாளர்கள் என்ற கருத்து இலங்கையின் வடபகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பரவியமைக்கு இவ ரது இவ்வாறான ஆளுமைமிக்க பணி வான, துணிவான செயற்பாடுகள் பறை சாற்றி நிற்கின்றன. இவர் தனது படைப் புக்களை பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவு ரையாளர்கள் பேராசிரியர்கள் அனைவ ரினது கவனத்திற்குட்படுத்தியுள்ளார். புவியியற் கலைச் சொற்பதங்கள் இவரது நூல்கள் ஊடாக ப[illegible]சையப்பட வைத்த துடன் விஷேடமாக பட வரைபுகள் இலகு படுத்தி தெளிவுபடுத்தி நின்றன. நூல்கள் வயது வகுப்பு எல்லைகட்கு உட்படுத்தி எழுதியதை பாராட்டுக்குரியதாக, குறிப் பிட்டிருப்பதை அணிந்துரைகளிலிருந்து அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. யப் பான், சிங்கப்பூர் என பல நாடுகள் பற்றி படத்துடன் தாம் பெற்ற அறிவை உருட்டி, திரட்டி மாணவர்கள் விருப்பத் துடன் கற்கக் கூடியவகையில் எழுதினார். பௌதிகப் புவியியலில் விஷேடமாக சுவாமி பற்றி எழுதியுள்ளார். புவியியற் பாடத்தில் பௌதிகப் புவியியல் போல் மானிடப் புவியியல், பொருளாதாரப் புவி யியல், பிரதேசப் புவியியல், குடித்தொகைப் புவியியல் எனப் பல்வேறு பாடப்பரப் பினை அளவளவாக வேண்டிய விடங் களில் உட்படுத்தி எழுதியுள்ளார். புதிய பதிப்புகள் பதிவாகும்போது புதிய ஏற்பா டுகள் கருதுகோள்கள் உட்படுத்தப்பட் டுள்ளன. காட்டுத்தீ, சூழல் மாசடைதல், காடழிப்பு, மண்ணரிப்பு, கடலரிப்பு, புவியில் அதிகரித்து வரும் தட்ப வெட்ப நிலை மாற்றங்கள், சூழலாதிக்கம், மனித வாதிக்கம் இன்னோரன்னவை இவரது புதிய பதிப்புகளில் பதிவாகியுள்ளன.

இவர் செய்த பங்களிப்புக்கு, பணிக்கு நன்றியுடையோராக 1963 காலப்பகுதி யைத் தொடர்ந்து இவரது நூலினால் பயனடைந்த தமிழ்மொழி மூலம் கற்றுத் தேர்ந்த சமூகம் நன்றியைத் தெரிவிக்க வேண்டிய அவசியம் உண்டு.

**பொ.ஸ்ரீஸ்கந்தராசா**
உப அதிபர், யாழ்.இந்துக் கல்லூரி.

## நீத்தார் நயப்புரை

# புத்தக சாலை



## ஐரோப்பா தேச வரலாற்றுக் குறிப்புகள்

*சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் கா.கமலநாதன் எழுதியுள்ள ''ஐரோப்பா தேச வரலாற்றுக் குறிப்புகள்'' என்னும் நூல் வெளிவந்துள்ளது.*

*மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் அருகிவரும் இந்த அவசர உலகில் சுருக்கமான முறையில் ஐரோப்பா தேச வரலாற்றுக் குறிப்புகளை எழுதியுள்ளமை சிறப்பம்சமாகும்.*

*க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கு மட்டுமன்றி தரம் 6-11 வரையான மாணவர்களும் படித்துக் பயன்பெறக்கூடிய நூலாகவும் இது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.*

## நண்பர்கள்




*யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலைய மாணவர்களால் ''நண்பர்கள்'' விளையாட்டுச் சஞ்சிகை வெளி யிடப் பட்டுள்ளது.*

*யாழ்.மாவட்டத்தில் முதலாவது விளையாட்டுச் சஞ்சிகை என்ற பெருமிதத்தோடு 'நண்பர்கள்' வெளிவந்துள்ளது.*

*முதல் சஞ்சிகையே அதன் முகப்புப் பக்கங்கள் மூவர்ணங்களில் வெளிவந்துள்ளமையும் இச்சஞ்சிகையின் சிறப்பம்சமாகும்.*

*யாழ்.மாவட்ட விளையாட்டுச் செய்திகள், வெளிநாட்டு விளை யாட்டுச் செய்திகள் என்பவற்றைத் தாங்கி நிகழ்வுகளின் புகைப் படங்களுடன் வெளிவந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.*

*இளம் சமூகத்தின் சிந்தையில் துளிர்த்துள்ள 'நண்பர்கள்' சஞ்சிகை விளை யாட்டுத்துறைசார் வாசகர்களின் வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை. மொத்தத்தில் நண்பர்கள் விளையாட்டுத் துறைசார் பிரியர்களின் நண்பன்.*

## அன்னை




*மாணவர்களின் மனங்களில் துளிர்கின்ற இலக்கியத்துறைசார் விடயங்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் நோக்கோடு 'அன்னை' எனும் இருவார சஞ்சிகை வெளி வந்துள்ளது.*

*இலக்கிய எண்ணம், மலரும் மொட்டுக்கள், துளிர்விடும் துளிர்கள், பொது அறிவு, அறிவுச்சுடர் எனப் பல்வேறு அம்சங் களை உட்பொதிவுகளாகக் கொண்டு 'அன்னை' வெளிவந்துள்ளது.*

*முற்றிலும் மாணவர்களின் எண்ணங்களைப் பதிவு செய்தவளாய் ''அன்னை'' தனக்குரிய தனித்துவமான அம்சங்களுடன் முதன் முதலாய் வாசகர்கள் எனும் குழந்தைகளின் கரங்களில் கிடைத்தி ருக்கிறாள்.*

*மொத்தத்தில் தமது எண்ணங்களைப் பதிவாக்கத் துடிக்கும் மாணவச் செல்வங்களின் வரப்பிரசாதமாக 'அன்னை' விளங்குவாள்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில் மலர்ந்தது: 21.08.1939

விண்ணில் ஒளிர்ந்தது 21.04.2008

# ஓராண்டு நினைவஞ்சலி

## அமரர் டாக்டர்
## வயிரமுத்து பூபாலசுந்தரம்



**திதி:- 09.05.2009(பிரதமை)**

பன்னிரண்டு திங்களுமே பறந்துதான் போனதுவே;
மின்னாமல் முழங்காமல் பெருமழைதான் வந்ததுபோல்
திடுதிப்பாய் உம் இழப்பு வருமென நாம் எண்ணவில்லை
எண்ணங்கள் உம் நினைவாய் அன்பிற்காய் ஏங்கிடுதே
அன்புமிகு அப்பாவே, ஆற்றொணாத் துயருடன் நாம்
பேருக்காய் வாழ்கின்றோம், உம் இழப்பு பேரிழப்பு
நினைவுகளைச் சுமந்து கொண்டேநும் புன்சிரிப்பு தவழும்
நிழற்படத்தைப் பார்க்கும் நிலை எமக்கின்று
நான்கு சட்டத்திற்குள் நாம் காணும் அப்பாவே
ஆண்டு பல கழிந்தாலும் உம் நினைவு எம்நினைவை விட்டு அழியாது.

உங்களது ஆத்மா சாந்தி பெற
அருளவேண்டி அரன் பாதம் பணிகின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**என்றும் உங்கள் நினைவுடனே வாழும்:**

சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

**குடும்பத்தினர்.**

# நெஞ்சை விட்டகலாத நினைவுகளில்

# முதலாமாண்டு நினைவஞ்சலி

## திருமதி ஸ்ரீநகுலமீரா சிதம்பரநாதன்



அன்னையின் கரத்தில்
16.05.1947

ஆண்டவன் தாளில்
21.04.2008

**திதி: சித்திரைமாத அபரபக்க பிரதமை**

காரானைக் கன்றென்னுங் கருணாகரப் பிள்ளையாரைக்
கண்டுகளி கூர்ந்துகை கூப்பித்தொழுமூர் உரும்பிராயில்
வாராந்த, மாதாந்த, வருடாந்த மஹோற்சவத்தை
வந்துகுடும் பத்துடனே வழிபட்டுச் சென்றதனால்
வாராத சித்தியெல்லாம் வழங்குவி நாயகரால்
வந்துகை கூடியதால் வாழ்வாங்கு வாழ்ந்துலகில்
ஆராத காதலொடும் அமரர்ஸ்ரீ நகுலமீரா
ஆண்டவன்றா ளடைந்தாள் அவள்தவஞ் செற்பற்பாற்றோ.

பொ.சிதம்பரநாதன்,
பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

**கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**


(64590)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்




சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க.பாடசாலையின் இல்லமெய்வன்மைப்போட்டி அண்மையில் நடைபெற்றது. வாழைச்சேனைக் கடதாசிக் கூட்டுத்தாபன ஓய்வுபெற்ற கணக்காளர் க.கனகசபை மங்கள விளக்கேற்றுவதையும் சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு ஒலிம்பிக் தீபம் ஏற்றிவைப் பதையும் படங்களில் காணலாம். அதிபர் திருமதி செ.செல்லையாவும் படத்தில் காணப் படுகிறார். (119)



ஹற்றன் நஷனல் வங்கியினரால் நடத்தப்பட்ட வலய மட்டங்களுக்கு இடையிலான சதுரங்கப் போட்டியில் அதிகூடிய 19 சம்பியன்களை வென்று சாதனை படைத்த பாடசாலையென்ற பெருமையை காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயம் தனதாக்கிக் கொண்டது.

பரிசில்கள் பெற்ற மாணவர்களையும் கல்லூரி அதிபர் ஏ.குமரேசமூர்த்தி மற்றும் கல்லூரியின் சதுரங்க பொறுப்பாசிரியர் நா.வாசுதேவன் ஆகியோரையும் படத்தில் காணலாம். (20)



வடமாகாண இலங்கைச் சாரணர் சங்கத்தின் முதியோர் சாரணர் விருது வழங்கும் நிகழ்வு கடந்த மாதம் 25 ஆம் திகதி யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

தேசிய மட்டத்தில் இலங்கைச் சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் முதிய சாரண தலைவர்களுக்கும் ஆதரவாளர்களுக்குமான விருதை பிரதம ஆணையாளர் சார்பாக யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.கைலாசநாதனுக்கு வழங்குதைப் படத்தில் காணலாம்.



சித்திரைப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு வலிகாமம் ப.தெ.வ.அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியில் ''இன்று பயிரிடுவோம் நாளை அறுவடை செய்வோம்'' என்ற தொனிப் பொருளில் மரம் நடுகையும் கொத்தணிப் பணியாளர்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கலும் இடம்பெற்றன.

நிகழ்வில் கொத்தணி பொது முகாமையாளர் க.சுதாகரன், மாவட்ட கூட்டுறவு அலுவலர் க.பாலச்சந்திரன், கொத்தணியின் தலைவர் க.மெய்யழகன் மற்றும் பணியாளர்கள் வழங்கப்பட்ட மரக்கன்றுகளுடன் நிற்பதைப் படத்தில் காணலாம். (9)



கோப்பாய்க் கோட்ட அதிபர் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின்போது பணிஓய்வுபெற்ற அதிபர்களான மு.தேவராஜா, எஸ்.செல்வநாயகம் மற்றும் பணிமாற்றலாகிச் சென்ற அதிபர்களான அ.அகிலதாஸ், சீ.சிவநேசன், மா.சிவபாலசுந்தரம் ஆகியோருடன் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மற்றும் கோப்பாய் கோட்ட பாடசாலை அதிபர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம். (72)



ஐ.எல்.ஏ. நிறுவனத்தினால் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பிரான்பற்று கிராமத்தில் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்ட மாதர் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினரிடம் பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் இயந்திரங்களைக் கையளித்தபோது எடுக்கப்பட்ட படம். (112)



லயன்ஸ் கழகம் 306 பி1 இன் முதலாவது மாவட்ட ஆளுநர் பதவிக்கு போட்டியிடும் லயன் எஸ்.வத்சலனின் அறிவிப்புக் கூட்டம் அண்மையில் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

லயன் எஸ்.வத்சலன் மற்றும் லயன்ஸ் கழக பிரமுகர்கள் மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். (20)




பாடசாலை செல்லாத இடைவிலகிய மாணவர்களை இனங்கண்டு கல்வி வழங்கல், வரவு ஒழுங்கீனமான மாணவர்களின் வரவைச் சீராக்குதல், கட்டாயக்கல்வி, முதியோர் கல்வித் திட்டங்களை முன்னெடுத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பான செயலமர்வு அண்மையில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடத்தப்பட்டது.

செயலமர்வில் பாடசாலை அதிபர் ஆறு.திருமுருகன் உரையாற்றுவதையும், வலிகாமம் கல்வி வலய முறைசாராக்கல்வி செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராஜா, சி.சிவஞானராஜா, உப அதிபர் செல்வி தே.சங்கரப்பிள்ளை, கந்தரோடை கிராம அலுவலர் செல்வி த.கீர்த்திகா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவுகளில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 . 04 . 1927



உதிர்வு 21 . 04 . 2008

## அமரர் இளையதம்பி மாணிக்கவாசகர்

(இளைப்பாறிய அரச ஊழியர்)

திதி: அபரபக்க பிரதமை (09.05.2009)

ஆண்டு ஒன்று ஆயினும் ஆறாது உங்கள் நினைவுகள்
எம்மைவிட்டு, என்றும் எம் காலம் உள்ளவரை
உங்கள் இனிய நினைவுகள் என்றும் எம்முடன் நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (சி/553365) **உறவினர்கள்.**

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சிதம்பரப்பிள்ளை கிருஷ்ணசாமி

மலர்வு: 20.02.1952 உதிர்வு: 13.05.2006

திதி: 09.05.2009

நெஞ்சினிலே நினைவு முகம்
நினைவினில் தெரிவது அன்பு முகம்
குடும்பத்தின் உயர்வுக்காக என்றும்
வாழ்ந்த எங்கள் அப்பாவே!
ஆண்டுகள் மூன்று சென்றாலும்
மறக்கவில்லை உங்கள் நினைவுகள்
புத்துயிர் மூலம் ஒரு வாரிசாக
வந்து பிறக்க வேண்டும்.

என்றும் நினைவுடன்:

லவ்லேன்,
உடுவில். (85089) **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## ஜெயமணி இராசையா



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயமணி இராசையா நேற்று (08.05.2009) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை இராசையா- மேரி ஆன் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஜெயராஜாவின் அன்புச் சகோதரியும் ஜெயராணி, ஜெயறூபன், ஜெயசிறி, ஜெயசங்கர் ஆகியோரின் பாசமிகு மாமியும் நிலூஷா, FRANKLIN, சொவ்வியா, கெவின், ஜெனி, பிறயன், ரிவ்வனி, ஜொஸ்வா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.05.2009) சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின் பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
C.S.அல்போன்ஸ்
(றொகான்).

பொந்தி ஒழுங்கை,
பண்டத்தரிப்பு. (84970)

# வன்னி அகதிகளுக்கென ஆசிரியர்களிடம் பலவந்தமாக நிதி திரட்டப்படுகின்றதா?

## சபையில் ஜே.வி.பி.குற்றச்சாட்டு

கொழும்பு, மே 9

வடக்கில் இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்கவெனக் கூறி ஆசிரியர்களிடம் பலவந்தமாக நிதி திரட்டப்படுகின்றது என்றும், நிதி வழங்காத ஆசிரியர்கள் மீது புலி முத்திரை குத்தப்படுகிறது என்றும் ஜே. வி. பி. நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கூறியது.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவுசெலவு அதிகரிப்பு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் எம்.பி. சுனில் ஹந்துன்நெத்தியே இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பற்தூரிகை, சவர்க்காரம் முதல் அனைத்துப் பொருட்களுக்கும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அறவிடப்படுகின்றது.

வரிவிலக்கப்பட்ட பொருள்களுக்குக்கூட மறைமுகமாக தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அறவிடப்படுகின்றது.

மேல் மாகாணசபைத் தேர்தல் முடிந்த கையோடு சமையல் எரிவாயுக்களின் விலையை அரசு அதிகரித்துள்ளது. அத்தியவசியப் பொருள்களுக்கான கட்டுப்பாட்டு விலையையும் தளர்த்தியுள்ளது.

இந்த நிலையில் அரசு சர்வதேச நாணயநிதியத்திடம் கடன் பெற முற்படுகிறது.அபிவிருத்திக் கடனைப் பெறப்போவதாக அரசு சொல்கிறது. சர்வதேச நாணயநிதியம் ஒருபோதும் அபிவிருத்திக் கடன்களை வழங்குவதில்லை. அது நிபந்தனையின் கீழ் மட்டுமே கடன் வழங்கும்.

இவ்வாறு பெறப்படும் கடன்களால் இந்த நாட்டு மக்கள்தான் பாதிக்கப்படுவர். இம் மக்களிடமிருந்து அரசு பணத்தைச் சுரண்டுகிறது.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா அகதி முகாம்களில் உள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கவெனக் கூறி அரசு ஆசிரியர்களிட்மிருந்து பலவந்தமாக நிதி திரட்டுகிறது. நிதி வழங்காத ஆசிரியர்கள் மீது புலி முத்திரை குத்தப்படுகிறது- என்றார். (சி)

# கலந்துரையாடல்கள்

மண்டுவில், மே.9

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் மூன்றிற்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வாசிப்பு முகாம் கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு நுணா வில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்மொழி அபிவிருத்தி வாசிப்பு முகாம் விடயங்கள் கலந்துரையாடப்பட்டு மத்திய நிலையத்திற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என வலய கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-59)

* * *

மண்டுவில், மே 9

தென்மராட்சிப் பிரதேச பாடசாலைகளில் தரம் ஐந்திற்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஜே.ஆர்.எஸ்.நிறுவன் அனுசரணையுடன் நடைபெறும் இக்கலந்துரையாடலில் 5ஆம் தர புலமைப்பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டல் கையேடும், வினாத்தாள் தயாரிப்பதற்குமான விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

ஆசிரியர்கள் தம்முடன் அறிவுரைப்பு வழிகாட்டி, பாடநூல், புள்ளிப்பகுப்பாய்வு, உசாத்துணை நூல்களை எடுத்து வரும்படி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-59)

# சைக்கிள்களுக்கு உரிமத்தகடு

வலிகாமம் மேற்குப் பிரதேசசபை 2009ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கர வண்டி உரிமத்தகடுகளை வழங்கி வருகின்றது.

இவற்றை வலிகாமம் மேற்குப் பிரதேசசபை உப அலுவலர்களான சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலியில் பெற்றுக் கொள்ளுமாறு செயலாளர் சு.புத்திசிகாமணி அறிவித்துள்ளார். (203-29)

# பதினோராம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 01 . 01 . 1933



விண்ணில் 12 . 05 . 1998

## திருமதி விநாயகமூர்த்தி சின்னம்மா

(குங்கிலியன்)

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/இணுவில் இந்துக் கல்லூரி)

அன்பின், பண்பின் இலக்கணமாய்
நேர்மையின் பிறப்பிடமாய், பாசத்தின் நிறைகுடமாய்
எம் எல்லோரையும் வாழ வைத்த ஒளி விளக்கே!
எம்முயிர் உள்ளவரை அழியாது உங்கள் நினைவுகள்.

இணுவில் தெற்கு,
இணுவில். (84956)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

24 ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்

**கலாலயா** பயிற்சியகம்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

* **3 மாத கால** கேக் ஐசிங் (7 வகை. 25 அமைப்புகளில்), ஐசிங் பூக்கள், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரங்கள் (50 வகை), பப்றிக் வர்ணம் தீட்டுதல், பூவேலை, கைவேலை, Saree Works. ***கூந்தல் அலங்கார பயிற்சிக்காலத்தின் நடுப்பகுதியில்*** *Facials*, மணமகள் அலங்காரம், Manicure, Pedicure, முடி அயன் செய்தல், வெட்டுதல், சுருட்டுதல், நிறமூட்டுதல் வகுப்புகள் ஆரம்பமாகும்.
* தையலில் அடிப்படை அறிவு அற்றவர்களுக்கான **6 மாத கால** உடை தயாரித்தல் வகுப்புகள். ➡ மேற்படி பயிற்சிகள் முடிந்தபின்னர் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* தையல் தெரிந்தவர்களுக்கான **2** வாரகால சாறி பிளவுஸ், சுரிதார் வகுப்புக்கள்

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம் : 11-05-2009 காலை 9.00 மணி**

*மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.* பதிவாளர்.

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி கமலாம்பிகை ஆறுமுகம்தம்பி

(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை)

தோற்றம்: 23.05.1921 மறைவு: 09.05.2002

"எங்களையும் வாழ வைத்த
தெய்வத்திற்கு எமது
கண்ணீர்ப் பூக்கள் என்றும்"

நினைவுடன்:
ராகுலன் (அம்பி-Swiss),
கங்காதரன் ராகினி (அம்மணி).

274, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (84965)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 13வயதுக்குட்பட்டவர்களின் தெரிவு அணிக்கான பயிற்சி முகாம் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் இலங்கை அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரும் (1986- 1992), இலங்கை துடுப்பாட்ட வீரர்கள் சங்கத்தின் செயலாளரும், இலங்கை துடுப்பாட்ட நிறுவனத்தின் பிரதம போட்டி நடுவருமான கிறேம் பிரெட்றிக் லப்றோய் மாணவர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதைப் படத்தில் காணலாம். யாழ்.மாவட்டத்தின் 24 பாடசாலைகளின் மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

(படங்கள்: லக்ஸ்மன்)

# பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட்; மானிப்பாய் இந்து 44 ஓட்டங்களால் வெற்றி

வலி வடக்கு, மே 9

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளின் 17 வயதுப் பிரிவினருக்கு இடையேயான 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியின் ஆட்டமொன்றில் மானிப்பாய் இந்துக்கல்லூரி 44 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரியும், ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக்கல்லூரி 24.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 131 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

லோகிதன் 42 பந்துகளில் ஐந்து நான்குகள் மூன்று ஆறுகளுடன் 50 ஓட்டங்களையும், சுமன் 16 ஓட்டங்களையும், நிக்ஷன் 12 ஓட்டங்களையும், நிரோசன் 10 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 20 ஓட்டங்களும் பெறப்பட்டன.


ஸ்கந்தவரோதயாக் கல்லூரியைச் சேர்ந்த விஜயரூபன் 06 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், சஞ்சயன் 3 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், குயின்ரன் 03 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், ராம்ராஜ் 6.5 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 20 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், குமுதன் 02 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

132 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 25.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 87 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

திவ்வியராஜ், சஞ்சயன் தலா 15 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 27 ஓட்டங்களும் பெறப்பட்டன.

மானிப்பாய் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த உமாசங்கர் 07 ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 08 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், யாழினியன் 09 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 24 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், லோகிதன் 04 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 07 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், சுமன் 3.4 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள். மானிப்பாய் இந்துக்கல்லூரி 44 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

(50-86)




# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மே 9

யாழ்.மாவட்ட உள்ளூராட்சிமன்ற விளையாட்டுக்கழகங்களுக்கிடையே யாழ். மாநகரசபை விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கான பரிசளிப்பு விழா கடந்த புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ, முதன்மை விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர்.

(9)

# ஆண்களுக்கான மாவட்ட மட்டக் கரப்பந்தாட்டம்; கோப்பாய்ப் பிரதேச செயலக அணி சம்பியனானது

வலி வடக்கு, மே.9

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினால் வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலக அணி யாழ்.மாவட்டச் சம்பியனாகியது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியும், கோப்பாய் பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் சளைக்காமல் மோதிக் கொண்டன. ஆட்டத்தின் இறுதிவரை போட்டி விறுவிறுப்பாக இருந்தமை பார்வையாளர்களையும் கவர்ந்தது.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று நேர் சுற்றுக்களை கோப்பாய் பிரதேச செயலக அணி 25:23, 25:23, 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியை வெற்றிபெற்று மாவட்ட சம்பியனாகியது.

(50-86)

# ஆண்களுக்கான சதுரங்கப் போட்டியில் மாவட்டச் சம்பியனானது ஹாட்லி

வலி வடக்கு, மே.9

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான சதுரங்கப் போட்டியில் பருத்தித்துறைக் ஹாட்லிக் கல்லூரி மாவட்ட சம்பியனாகியது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டு அரங்கில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் ஹாட்லிக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி நிறைவில் ஹாட்லிக் கல்லூரி சம்பியனாகியது. இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பெற்றுக் கொண்டது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும் மோதிக்கொண்டன. இதில் இரு அணிகளும் ஆட்ட நிறைவில் சமபுள்ளிகளைப் பெற்றுக்கொண்டதைத் தொடர்ந்து இரு பாடசாலைகளும் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டன.

(50-86)

# ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் சம்பியனாகியது

வலி வடக்கு, மே 9

தீவக கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ் கல்லூரி தீவக கல்வி வலயச் சம்பியனாகியது.

போட்டிகள் ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

இரண்டாம் இடத்தை நெடுந்தீவு மகா வித்தியாலயம் பெற்றுக்கொண்டது.

(50-86)

# விளையாட்டு நிகழ்வு

வலி வடக்கு, மே 9

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினால் வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையேயான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் கரவெட்டி இமையாணன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

* காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு எதிர் யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்.
* நல்லூர் பிரதேச செயலகம் எதிர் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்.
* நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு எதிர் வேலணை பிரதேச செயலகம்.

இரண்டாம் சுற்றில் இருந்து உடுவில் பிரதேச செயலக அணி மோதும்.

(50-86)

# கராத்தேயும் பௌதிகவியலும்

கராத்தே என்னும் வெறுங்கை தற்காப்புக் கலையானது பௌதிகவியலுடன் எவ்வாறு தொடர்புபட்டுள்ளது என்பதை ஒருசில உதாரணங்கள் மூலம் விளங்கப்படுத்தலாம்.

முதலில் கராத்தே ஆனது பல்லவ நாட்டு மன்னன் போதிதர்மா என்பவரால் இந்தியாவில் இருந்து சீனாவிற்கு 'குங்பு' (Kungfu) என்னும் பெயருடன் எடுத்துச் செல்லப்பட்டு யப்பானின் தேசிய கலையுடன் இணைக்கப்பட்டு கராத்தே உருவாகியது. இதில் பல உட்பிரிவுகள் உள்ளன. ஆனாலும் பலரால் (18 மில்லியன்) பின்பற்றப் பட்டுவரும் பிரிவு சோட்டோக்கான் ஆகும்.

இதிலும் யாழ்ப்பாணத்தில் அதிக எண்ணிக்கையான இடங்களில் இது பரவியுள்ள கலையாகும். அதிலும் வட்டுக்கோட்டையில் பூரணமாக இக்கலை குடிகொண்டுள்ளது. இக்கலையை யாழ்ப்பாணத்தில் சிறப்பாகவும் முறையாகவும் பயிற்றுவித்து வருபவர்களில் மூத்த ஆசிரியர் கபிறியல்றேமன் பெனடிற் (6th Dan) என்பவரும் ஒருவர். இவர் பொனி றொபேட்டின் முக்கியமான மாணவனும் நத்தானியல் என்பவரின் மாண வனும் ஆவார்.

இக்கலையில் பல அசைவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏனெனில் இவ் அசைவுகள் மூலம் எங்களுடைய உறுதியை வலுவாகப்பேணி எதிரியைத் தாக்கலாம். இதில் ஒன்று செங்குத்துடாயி (Zenkupsu Dachi) இதில் தோள் அகலத்தில் முன் னோக்கி காலை வைத்து முக்கோணப்படிவின் (Triangular formation) மூலம் சிறந்த உறுதி பேணப்படுகின்றது.

இவ்வாறு இந்த அசைவில் இருந்து Punch பண்ணும்போது எதிரிக்கு ஏற்படும் பாதிப்பை கூட்ட வேண்டும். பாதிப்பு விசை (F) இல் தங்கியுள்ளது. ஆனால் நியூட்டனின் 2 ஆம் விதிப்படி F=ma எனவே திணிவு, ஆர்முடுகல் கூட்டப்படல் வேண்டும். ஆகவே திணிவைக் கூட்டுவதற்கு ஒரு நுட்பம் (technique) கையாளப்படுகிறது. எவ்வாறு எனில் கையால் மட்டும் குத்தாமல் (Punch) உடல்வலுவையும் (Body power) பாவித்து குத்தப்படுகிறது. அடுத்து a கூட்டப்படல் வேண்டும். இதற்கு பல நுட்பங்கள் பாவிக்கப்படுகின்றன.

1. குறைந்த நேரத்தில் கூடிய தூரத்தினூடாக கை கடக்குமாறு குத்துவோம். V கூட்டப் பட்டு a கூட்டப்படுகிறது ஆகவே ↑F=ma.↑

2. அடுத்து குத்தை (Punch) தோள்மூட்டு (Shosulder) சற்றுக் கீழே குத்தும் a யுடன் புவியீர்ப்பு ஆர்முடுகல் g உம் சேர்கிறது. எனவே a கூட்டப்படுகின்றது.

3. குத்தும் போது (Punch) இடுப்பைத் திருப்பி (hip twist) குத்தும் போது பலித ஆர்முடுகல் கூட்டப்படுகிறது. இதனால் m,a கூட்டப்படுவதனால் F கூடும். எனவே உயர் F உடன் எதிரியைத் தாக்கலாம்.

அத்துடன் இவ்வாறு தாக்கும் போது தாக்கத்தைக் கூட்டுவதற்கு குத்தும் போது (Punch) தொடுகையுறும் நேரம் குறைக்கப்படுகின்றது. ஏனெனில் ($F=\frac{\Delta mv}{t}$) F ஐ கூட்டுவதற்காக அதே வேளை குத்தும் போது (Punch) கைவிரல்களின் மொழிகளால் குத்தப்படுகிறது. ஏனெனில் ($Stress=\frac{Force}{Area}$) பலித பரப்பு குறைப்பதற்காகும். இதனால் (Stress) கூட்டப்படும்.

அத்துடன் எதிரி எம்மை நோக்கி வரும்போது குத்தினால் (Punch) Momentum அதிகரிக்கப்படும். ($F=\frac{2mv}{t}$) எனவே F கூட்டப்படும்.

அத்துடன் குத்தும் போது (Punch) கையைத் திருப்புவதன் (twist) மூலம் சுழற்சி இயக்கசக்தி ($\frac{1}{2} iw^2$) சேர்த்து எதிரியின் தசையின் நெரிவைக் கூட்டலாம்.

அடுத்ததாக ஒருவரைத் தூக்கி வீசுதல் (Throwing) இதில் ஒரு பொருளின் (உடலின்) உறுதியினைக் குலைத்து வீசப்படுகின்றது. உறுதி எவ்வாறு குலைக்கப்படுகின்றது எனில் எதிரியின் இடுப்புடன் (hip) எங்களுடைய இடுப்பை வைத்து எதிரியின் உடலின் மையத்தை (Centre of mass) ஐ முன்னோக்கி நகர்த்தி விடுவதன் மூலம் பாதத்தினூடாகச் செல்லும் centre of mass முன்னோக்கி நகர உறுதி குலையும் இப்போது எங்களுடைய கையால் இழுத்து முன்னோக்கித் தூக்கி அடித்து விடலாம்.

இவ்வாறு பல உயர்நுட்பங்கள் பௌதிகவியல் மூலம் விளங்கப்படுத்தலாம். இதனால் சில உயர் மட்ட நுட்பங்களுக்கு உதாரணமாக உடல் தொடுகையின்றி தாக்கப்படுவதற்கு பௌதிகவியலினால் [illegible]முடியாது. இவை meta physics இல் அடக்கப்படுகின்றன. எனவே இவை ஆரா[illegible]யவையாகும்.

[illegible],
(1ஆம் கறுப்புப்பட்டி),
4ஆம் வருட பௌதிகவியல்துறை மாணவன்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

மண்ணில் மைந்தனாய்
13 . 03 . 1943

விண்ணில் தெய்வமாய்
21 . 04 . 2008



# அமரர் கந்தையா மகாதேவன்

திதி: சித்திரை மாத அபரபக்க பிரதமை (09.05.2009)

ஆருயிர் அப்பா!
ஆண்டொன்று ஆனதின்று அவனிதனை நீங்கள் பிரிந்து
ஆறவில்லை நம் துயரம் அலைகடலாய் நினைவுகள் நெஞ்சில்
ஈண்டெம்மைத் தவிக்கவிட்டு பிரிந்துதான் சென்றதேனோ
மீண்டும் நீங்கள் வந்து வீட்டில் ஒளி ஏற்றிடுவீர்கள்

சின்ன வயதிலெமைச் சீராட்டி வளர்த்தீர்கள்
கன்னல் அமுதான கல்வி தனை அளித்தீர்கள்
மன்னர் போல் வாழ்ந்து மலைபோல் சிறந்தீர்கள்
பின்னர் எமக்கு ஆதரவு பேணாமற் சென்றீர்களே!

உங்கள் ஆத்ம சாந்திக்காய் உற்றார் உறவினரோடு
எமது வினை நாளெல்லாம் என்றும் பிரார்த்திப்போம்
எமையெல்லாம் காத்து நீங்கள் ஆசிக்க வேண்டும் என்று
உமையாபாலன் விநாயகரை உள்ளளவும் வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் நீங்கா நினைவுகளுடன்:
உங்கள் அன்பு மனைவி- ம.கலாநிதி,
பாசமிகு பிள்ளைகள்- ம.ரதீபன், ம.ரஜீவன், ம.பரோநிதி, ம.மதுபா.

84/6 தபாற்கந்தோர் லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(64917)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ. விமானத் தாக்குதலில் பொதுமக்கள் கொல்லப்பட்டதை ஆட்சேபித்து கண்டன ஆர்ப்பாட்டம்

## ஆப்கானில் பாரா நகரில் பேரணி

காபூல், மே 9

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்ட விமானத் தாக்குதலில், பெருந் தொகையான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளமைக்கு கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்துக்குக் கண்டனம் தெரி வித்து, மேற்கு ஆப்கானிஸ்தான் பாரா நகரில் வியாழக்கிழமை மாபெரும் பேரணி நடத்தப்பட்டது.

இப்பேரணியில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். பலர் அரச கட்டடங்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். மற்றும் பலர் கல்வீச்சில் ஈடுபட்டனர். பேரணியில் கலந்து கொண்டோர், ''அமெரிக்கா ஒழிக'', ''ஆக்கிரமிப்பாளர்கள் ஒழிக'' என கோஷங்கள் எழுப்பினார்கள்.

''கண்டனப் பேரணியில் கலந்துகொண்டோரில் அநேகர் வன்முறையில் ஈடுபட்டனர். அரச கட்டடங்களுக்குச் சேதம் விளைவித்தனர். பேரணியைக் கலைக்க முற்பட்ட பொலிஸாரை நோக்கி கல்வீச்சில் ஈடுபட்டனர். பொலிஸார் ஆகாயத்தை நோக்கி எச்சரிக்கை வேட்டுகளைத் தீர்த்தனர்'' என பாரா மாநில துணை ஆளுநர் யூனுஸ் ரசோலி, ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

''அமெரிக்கா மேற்கொண்ட விமானத்தாக்குதலில், நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் பெருந்தொகையானோர் சிவிலியன்களாவர். 20 சிறுவர்களின் சடலங்களை நான் கணக்கிட்டுள்ளேன்'' என ஆப்கான் அதிகாரிஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

''அப்பாவி பொதுமக்கள் டசின் கணக்கில் கொல்லப்பட்டுள்ளார்கள். இவர்களில் பெண்களும், பிள்ளைகளும் அடங்குவர்'' என செஞ்சிலுவைச் சங்கப் பிரமுகர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். ''குண்டுத்தாக்குதலில், அநேக வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. பெருந்தொகையானோர் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி உயிர்நீத்துள்ளனர்'' என்றும் அவர் விவரித்துள்ளார்.

ஆப்கான் ஜனாதிபதி அஹ்மத் கர்சாய், அமெரிக்காவில் ஆரம்பமான முத்தரப்பு மாநாட்டில் கலந்துகொண்டுள்ளார். இத்தாக்குதல் சம்பவத்துக்கு அவர் அமெரிக்காவிடம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். அத்துடன் சிவிலியன் பகுதி மீதான தாக்குதலை நிறுத்திக்கொள்ளுமாறு கர்சாய் அமெரிக்காவைக் கோரியுள்ளார்.

''சிவிலியன்கள் மீதான தாக்குதல் கைவிடப்பட வேண்டும். இத்தகைய உயிரிழப்புகள், தலிபான் தீவிரவாதிகளுக்கும், அல்-குவைதா தீவிரவாதிகளுக்கும் எதிராக நாம் மேற்கொண்டுள்ள போராட்டத்தை பலவீனப்படுத்தி விடும்'' என்றும் கர்சாய், அமெரிக்க அரசிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா நடத்திய விமானத் தாக்குதலில் 100 பேர் பலியாயினர். அவர்களில் பெரும்பாலானோர் தீவிரவாதிகள் அல்லர். அவர்கள் அப்பாவிகள் என ஆப்கானிஸ் தான் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்கு பகுதியிலுள்ள பாரா மாநில பாலா புலுக் மாவட்டத்தில் திங்கட்கிழமை இரவு இந்த விமானத் தாக்குதல் தொடங்கியது. அடுத்தநாள் செவ்வாய்க்கிழமை காலை வரை இத்தாக்குதல் நீடித்தது.

''அமெரிக்காவின் தரைப் படையும், விமானப் படையும் கூட்டாக தீவிரவாதிகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தின. இத் தாக்குதலில் 100 பேர் பலியாயினர். அவர்களில் 25 முதல் 30 பேர் வரைதான் தலிபான்கள். எஞ்சியவர்கள் அனைவரும் அப்பாவிகள்'' என ஆப்கான் பொலிஸ் அதிகாரி அப்துல் ராப் அகமதி ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தார். கொல்லப்பட்டவர்களில் பலர் சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் ஆவார்கள் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மலேஷியாவில் அடைத்து வைக்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழ்ச் சிறுமி மீட்டெடுப்பு!

கோலாலம்பூர், மே 9

மலேஷியாவின் புச்சோங் நகரில் ஒரு வீட்டில் அடைத்து வைக்கப்பட்டிருந்த எட்டு வயது இலங்கைத் தமிழ்ச் சிறுமியை பொலிஸார் மீட்டுள்ளனர்.

கடந்த வாரம் இதேபோல் அடைத்து வைக்கப்பட்டு, மீட்கப்பட்ட தமிழ்ச் சிறுவன் கூறிய தகவலின் அடிப்படையில் இந்தச் சிறுமி மீட்கப்பட்டுள்ளார்.

சலோமியா பிரேம்குமார் என்ற அந்தச் சிறுமியின் சித்தி பாரிஸில் உள்ளார். சலோமியாவின் தாயார் தங்கமலர். தந்தை பிரேம்குமார் சில ஆண்டுகளுக்கு முன்னர் இறந்துவிட்டார்.

ஈழத்தில் நிலைமை மென்மேலும் மோசமாகி வருவதால், தனது ஒரே மகளை பாரிஸிலுள்ள தனது தங்கையிடம் சேர்ப்பிக்க முடிவு செய்து கொழும்பிலுள்ள ஒரு வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனம் மூலம் மகளை அனுப்பி வைக்க தாயார் ஏற்பாடு செய்தார்.

எனினும், அந்த முகவர் நிறுவனம் பாரிஸுக்கு அனுப்புவதற்குப் பதிலாக சலோமியாவை மலேஷியாவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

மலேஷியாவுக்கு அழைத்து வரப்பட்ட சலோமியா, புச்சாங் நகரிலுள்ள சாந்தி என்பவரது வீட்டில் ஒப்படைக்கப்பட்டார். அதே வீட்டில் இலங்கையைச் சேர்ந்த 14 வயது சிறுவன் தில்ருக்ஷனும் அடைத்து வைக்கப்பட்டிருந்தார்.

சாந்தியும், அவரது மைத்துனரும் சேர்ந்து இந்தச் சிறார்களை கொடுமைப்படுத்தியுள்ளனர். அடித்து சித்திரவதை செய்துவிட்டு வேலை செய்யுமாறு இம்சைப்படுத்தியுள்ளனர். சரியாக சாப்பாடும் தரப்படுவதில்லை.

இந்நிலையில், கடந்த வாரம் தில்ருக்ஷன் மலேஷிய இந்திய காங்கிரஸ் கட்சி இளைஞர் பிரிவு ஒருங்கிணைப்பாளர் மோகனுக்கு தொலைபேசி மூலம் தனது நிலையைத் தெரிவித்தார். இதையடுத்து, மோகனின் நடவடிக்கையின்பேரில் பொலிஸார் விரைந்து சென்று தில்ருக்ஷனை மீட்டனர். பின்னர் செவ்வாய்க்கிழமை சலோமியாவை மீட்டனர்.

இது குறித்து மோகன் கூறுகையில், ''சலோமியாவின் தாயாருக்கு தனது மகள் மலேஷியாவுக்கு வந்தது தெரியுமா என்று தெரியவில்லை. அவரைத் தொடர்பு கொள்ள முயற்சித்து வருகிறோம். சாந்தியும், அவரது மைத்துனரும் சேர்ந்து சலோமியாவையும் தில்ருக்ஷனையும் கொடுமைப்படுத்தி வந்துள்ளனர். சரியாக சாப்பாடும் தராமல், வீட்டு வேலைகளைச் செய்ய வைத்துள்ளனர்'' என்றார்.

''கடந்த எட்டு மாதங்களாக இரு சிறார்களும் சித்திரவதைக்குள்ளாகியுள்ளனர். தற்போது சாந்தியும், அவரது மைத்துனரும் கைது செய்யப்பட்டுவிட்டனர். இரு சிறார்களும் மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் நலத்துடன் உள்ளார்கள் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போது இருவரும் ஒரு ஆதரவற்றோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்'' என்றும் அவர் தெரிவித்தார்.

''அவர்களை மலேஷிய - இந்திய காங்கிரஸ் கட்சியின் இளைஞர் பிரிவு பராமரித்து வருகிறது. மீண்டும் அவர்களை இலங்கைக்கு அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன'' என்றும் அவர் கூறினார்.

''இலங்கையில் இனப் பிரச்சினையில் சிக்கி பரிதாபமான நிலையில் இருக்கும் தமிழ் மக்களிடம், மலேஷியாவைச் சேர்ந்த சக தமிழர்களே இவ்வாறு நடந்துகொண்டுள்ளனர். இது மிகவும் வேதனைக்குரிய தொன்று. இப்படிப்பட்டவர்கள் மீது பொலி ஸார் மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றும் மோகன் கேட்டுக்கொண்டார்.

## உலக அரங்கில்

# கலிபோர்னியாவில் காட்டுத் தீ பரவல்

சான்டா பார்பரா, மே 09

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநில கடற்பிராந்திய நகரான சான்டா பார்பராவுக் கருகில் மூண்ட காட்டுத் தீ, துரிதமாக பரவி வருகிறது. இதனால் ஏறத்தாழ எட்டாயிரம் பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அப்பகுதியில் அநேக வீடுகள் காட்டுத் தீயால் சேதமடைந்துள்ளன. சான்டா பார்பராவைச் சுற்றியுள்ள வனாந்தரப் பகுதிகளில் ஏராளமான வீடுகள் தீப்பற்றி எரிகின்றன. தீயைக் கட்டுப்படுத்துவதற்கான பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சான்டா பார்பரா தீயணைப்புப் படையைச் சேர்ந்த ஆயிரத்து 300 வீரர்கள் காட்டுத் தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். இவர்களில் பயங்கர தீக்காயங்களுக்குள்ளான 7 வீரர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

கலிபோர்னியா மாகாண ஆளுநர் ஆர்னோல்ட், அவசர கால நிலையை பிரகடனம் செய்துள்ளார். இதுவரை 500 ஏக்கர் நிலப்பரப்பில் காட்டுத் தீ பரவியுள்ளது.

## சீன ஜனாதிபதியுடன் ஒபாமா பேச்சு

பாகிஸ்தான், வட கொரியா ஆகிய நாடுகளின் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, வியாழக்கிழமை சீன ஜனாதிபதி ஹூ ஜிண்டாவோவுடன் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு விவாதித்தார் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இத்தொலைபேசி கலந்துரையாடல் குறித்து, வெள்ளை மாளிகை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அதில், ''ஜனாதிபதி பராக் ஒபாமா, வியாழக்கிழமை காலை சீன ஜனாதிபதி ஹூ ஜிண்டாவோவுடன் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு கலந்துரையாடினார்'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெளிநாடு சென்றுள்ள முஷாரப் மீண்டும் நாடு திரும்புவாரா?

## தலிபான்களின் நடவடிக்கை தீவிரமடைவதால்

இஸ்லாமாபாத், மே 09

தலிபான்கள் மீதான நடவடிக்கை பாகிஸ்தானில் தீவிரமடைந்துள்ள நிலையில், ஐரோப்பா சென்றுள்ள பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் நாடு திரும்புவாரா, மாட்டாரா என்பது கேள்விக் குறியாகியுள்ளது.

விரிவுரை ஒன்றுக்காக வெளிநாடு சென்றுள்ள அவர் விரைவில் நாடு திரும்பமாட்டார் எனத் தெரிகிறது. இதை அவரது நெருங்கிய நண்பரும் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரலுமான ரஷீத்த குரேஷி தெரிவித்துள்ளார்.

''முஷாரப் வெளிநாட்டில் நீண்ட நாள் தங்கவிருக்கிறார். எனினும், எப்போது அவர் திரும்புவார் என தெரியாது. அது குறித்து எனக்கு தகவல் கிட்டவில்லை'' என நாளிதழ் ஒன்றுக்கு தாம் அளித்துள்ள பேட்டியில் குரேஷி தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி சவூதி அரேபியா சென்ற முஷாரப் அங்கிருந்து ஐரோப்பா சென்றார்.

முஷாரப் பாகிஸ்தானில் இரு முறை தீவிரவாதிகளின் கொலை முயற்சியிலிருந்து தப்பியுள்ளார். இருப்பினும், பல்வேறு [illegible] ரவாத இயக்கங்களின் கொலைப் பட்டியலில் அவர் இடம்பெற்றுள்ளார்.

தற்போது லண்டனிலுள்ள முஷாரப் அங்கிருந்து அமெரிக்கா செல்லவுள்ளார். பின்னர் அங்கிருந்து மீண்டும் ஐரோப்பா செல்லவிருக்கிறார் என முஷாரப்பின் மற்றொரு நண்பரான ஷெஹரயார் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதிக்கு 3 மனைவியர்

# தென்னாபிரிக்காவின் முதற் பெண்மணி யார்?

டர்பன், மே 9

தென்னாபிரிக்காவில் முதல் பெண்மணி அந்தஸ்து வழங்குவதில் ஏற்பட்டிருந்த சிக்கலுக்கு முடிவு கட்டப்பட்டுவிட்டது. எந்த ஒரு நாட்டிலும் முதல் பெண்மணியாக ஒருவரே இருப்பார். இந்த நியதியை தென்னாபிரிக்கா தகர்த்துவிட்டது. இங்கு முதல் பெண்மணிகள் மூவர். புது நியதிக்கு தென்னாபிரிக்கா முன்னுதாரணமாகிவிட்டது.

ஒவ்வொரு நாட்டிலும் ஜனாதிபதி அல்லது அதிபராக இருப்பவர் அந்நாட்டின் முதல் குடிமகன் என்று அழைக்கப்படுவார். அவரது மனைவி நாட்டின் முதல் பெண்மணி என்ற அந்தஸ்தைப் பெறுவார். வெளிநாட்டுத் தலைவர்கள் அந்தந்த நாடுகளுக்கு சுற்றுப் பயணம் செய்யும் போது விமானநிலையத்துக்குச் சென்று வரவேற்பு கொடுப்பதில் முதல் பெண்மணியின் பங்கு முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

தென்னாபிரிக்காவில் இந்த முதல் பெண்மணி விடயத்தில் திடீரென ஒரு சிக்கல் எழுந்தது. அங்கு புதிய ஜனாதிபதியாக ஜேக்கப் ஜூமா தெரிவுசெய்யப்பட்டுள்ளார். 67 வயதாகும் அவருக்கு 3 மனைவிகள்.

இந்த 3 மனைவிகளில் முதல் பெண்மணி அந்தஸ்து யாருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பதில் கேள்விக்குறி எழுந்தது. கடந்த ஒரு மாதமாக இந்தச் சிக்கலுக்கு விடை காண இயலவில்லை. ஜூமா இன்று சனிக்கிழமை புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்பதால் ''முதல் பெண்மணி'' பிரச்சினைக்கு விடை காண வற்புறுத்தப்பட்டது.

ஜூமாவின் முதல் மனைவி சிஜக்கில். இவருக்கு வயது 69. ஜூமாவைவிட இவர் 2 வயது மூத்தவர். 2 ஆவது மனைவி நோம்பு மேலிலோ. இவருக்கு 35 வயது. ஜூமாவின் 3 ஆவது மனைவி தோபிகா. இவருக்கு 20 வயதுதான் ஆகிறது. இவர்கள் மூவருக்கும் முதல் பெண்மணி அந்தஸ்து வழங்கவேண்டும் என ஜனாதிபதி ஜூமா கேட்டுக்கொண்டார். இதில் இவர் எவரையும் விட்டுக்கொடுக்கவில்லை.

இவரின் கோரிக்கையை தென்னாபிரிக்க அதிகாரிகள் ஏற்றுக்கொண்டனர். இதனால் தென்னாபிரிக்காவுக்கு 3 முதல் பெண்மணிகள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஜூமா இது பற்றி கூறுகையில், ''எனக்கு 3 மனைவிகள். இதில் எந்த தவறும் இல்லை. இதில் நான் ஒளிவுமறைவாக செயற்படவில்லை. 3 மனைவிகள் மீதும் அன்பு காட்டுகிறேன். 3 பேரையும் சமமாக நடத்துகிறேன். ஆதலால் மூவருமே முதல் பெண்மணிகள்தாம்'' என்றார்.

இன்று ஜூமா பதவி ஏற்பு விழாவில் 3 மனைவிகளும் பங்கேற்கவுள்ளனர்.

# பன்றிக் காய்ச்சலை தடுக்க ஊசி; பிரிட்டன் நிறுவனம் துரித முயற்சி

லண்டன், மே 9

பன்றிக் காய்ச்சலைத் தடுக்க தடுப்பூசி கண்டுபிடிக்கும் முயற்சியில் பிரிட்டிஷ் நிறுவனம் ஈடுபட்டுள்ளது. முதல் தடுப்பூசி இன்னும் மூன்று வாரங்களில் தயாராகிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பன்றிக் காய்ச்சல் உலகம் முழுவதும் மக்களைப் பீதியடைய செய்து வருகிறது. இதையடுத்து, இந்நோய் மேலும் பரவாமல் தடுக்கப் பல பன்னாட்டு மருந்து நிறுவனங்களும் தடுப்பூசி கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. இந்த வரிசையில் தற்போது பிரிட்டிஷ் விஞ்ஞானிகளும் இம்முயற்சியை மேற்கொண்டுள்ளனர்.

பிரிட்டனின் ஹெர்ட்போர்டுஷையர் நகரிலிருக்கும் தேசிய உயிரியல் தரக்கட்டுபாடு நிறுவனத்தைச் சேர்ந்த இந்த விஞ்ஞானிகள் தற்போது அதிவேகமாக ஆராய்ச்சி செய்து வருகின்றனர். இவர்கள் கோழி முட்டைக்குள் இலேசான துளைபோட்டு அதில் இந்த காய்ச்சல் வைரஸை வளர்க்கத் திட்டமிட்டுள்ளனர்.

இது குறித்து ஜோன் வுட் என்ற விஞ்ஞானி கூறுகையில், ''வைரஸ்கள் வளர்வதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் கோழி முட்டைக்குள் இருக்கின்றன. அவை வைரஸ் தொழிற்சாலைகள்'' என்றார்.

இந்நிலையில், விஞ்ஞானிகள் முட்டையில் துளைபோட்டு அதில் பன்றிக் காய்ச்சல் வைரஸைப் போட்டு அவற்றை வளரச் செய்கின்றனர். பின்னர் அவர்கள் இரண்டு தொழில் நுட்பங்களின் மூலம் தடுப்பூசி தயாரிக்க உள்ளனர். [illegible] தொழில்நுட்பத்துக்கு ரிவர்ஸ் ஜெனடிக்ஸ் என்று பெயர்.

இதில் [illegible] மற்றும் என் [illegible] தங்களைத் தனியாகப் [illegible] பிஆர் 8 என்ற வைரஸின் [illegible] இணைக்கின்றனர். அப்போது கிடைக்கும் நோய் தன்மையற்ற ஒட்டு வைரஸ் மூலம் மருந்து தயாரிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

மற்றொரு முறையில் எச்1என்1 மற்றும் பிஆர் 8 இரண்டையும் ஒரே சமயத்தில் முட்டைக்குள் இட்டு, அவற்றை இயற்கை வழியில் ஜீன் மாற்றம் அடையச் செய்து, அதன் மூலம் உருவாகும் புதிய ஒட்டு வைரஸிலிருந்து மருந்து தயாரிக்கவிருக்கின்றனர்.

இந்த ஆராய்ச்சி விரைவில் முடிந்து இன்னும் 3 அல்லது 4 வாரங்களில் புதிய தடுப்பூசி தயாராகிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தாலும், இவற்றை பெரிய அளவில் தயாரிக்க நான்கு முதல் ஐந்து மாதங்கள் கூடுதலாகத் தேவைப்படும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியத் தேர்தலில் 4 ஆம் கட்ட வாக்களிப்பு; வன்முறைகள் வெடித்தன; சூட்டுக்கு இருவர் பலி

## வெய்யில் தாங்கமுடியாது வாக்களிக்க நின்ற இருவர் மரணம்

புதுடில்லி, மே 9

மக்களவைக்கு நான்காம் கட்டமாக வியாழக்கிழமை நடைபெற்ற தேர்தலின்போது ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களில் 2 பேர் உயிரிழந்தனர். மேலும், வெய்யில் தாங்க முடியாமல் வாக்குச்சாவடியில் 2 பேர் உயிரிழந்தனர்.

மேற்குவங்கம், ஜம்முகாஷ்மீர் ஆகிய மாநிலங்களில் வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்தன.

8 மாநிலங்களைச் சேர்ந்த 85 தொகுதிகளில் நடந்த இந்தத் தேர்தலில் சுமார் 57 சதவீத வாக்குகள் பதிவானது.

ராஜஸ்தான், ஹரியாணா, டில்லி, பீகார், ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்கம் ஆகிய 8 மாநிலங்களில் இந்த தேர்தல் நடைபெற்றது. இதில் மேற்கு வங்கம், ஜம்முகாஷ்மீர், ராஜஸ்தானில் ஒரு சில இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்தன. பிற மாநிலங்களில் தேர்தல் பொதுவாக அமைதியாக நடந்து முடிந்தது.

ராஜஸ்தான் மாநிலம் சவாய்மதோபூர் மாவட்டத்தில் வாக்குச்சாவடியை கைப்பற்ற ஒரு கும்பல் முயன்றபோது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் ஒருவர் உயிரிழந்தார்.

மேற்கு வங்கம் கிழக்கு மிதுனபுரி மாவட்டத்தில் வாக்களிக்க வரிசையில் காத்திருந்தவர்களில் இருவர் வெய்யில் தாங்க முடியாமல் மயங்கி விழுந்து உயிரிழந்தனர்.

முர்ஷிதாபாத் மாவட்டம் இரோலி கிராமத்தில் வாக்களித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மார்க்சிஸ்ட் தொண்டர் காசிநாத் முண்டலை (வயது - 28) மர்ம நபர்கள் சிலர் வெடிகுண்டுகளை வீசி கொலை செய்தனர்.

ஜாங்கிபூர் தொகுதியில் வாக்குச் சாவடி ஒன்றில் காங்கிரஸ் தொண்டர்களுக்கும், மார்க்சிஸ்ட் கட்சியினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதில் காங்கிரஸ் தொண்டர்கள் இருவர் காயமடைந்தனர். நந்திகிராமம் அருகே திரிண மூல் காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கட்சியினரிடையே நிகழ்ந்த மோதலில் ஒருவர் காயமடைந்தார்.

கோகுல் நகர் பகுதியில் வெடிகுண்டுப் புரளியால் பதற்றம் ஏற்பட்டது. ஒரு சில இடங்களில் வாக்குச் சாவடியை கைப்பற்றிய சம்பவங்களும் நிகழ்ந்தன.

காஷ்மீரில் ஸ்ரீநகர் மக்களவைத் தொகுதிக்கு மட்டும் வியாழக்கிழமை தேர்தல் நடைபெற்றது. ஸ்ரீநகரில் லால் பஜாரில் பாடசாலை ஒன்றில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடி மீது அதிகாலை 5 மணியளவில் மர்ம நபர்கள் பெற்றோல் குண்டுகளை வீசினர். இவைமதில்சுவர்மீது விழுந்து வெடித்ததால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

பல்வேறு இடங்களில் வாக்குச் சாவடிகள் மீது இளைஞர்கள் கற்களை வீசினர். பொலிஸார் தடியடி நடத்தியும், கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் அவர்களைக் கலைத்தனர். சில இடங்களில் வன்முறையாளர்கள் வாகனங்களைச் சேதப்படுத்தினர்.

தேர்தல் தினத்தன்று வேலை நிறுத்தத்துக்கு ஹுரியத் மாநாட்டுக் கட்சி அழைப்பு விடுத்திருந்ததால் ஸ்ரீநகரில் முக்கிய வீதிகள் வெறிச்சோடின.

ராஜஸ்தானில் சுயேச்சை வேட்பாளர் கிரோரிலால் மீனா மீது மர்ம நபர்கள் சிலர் கற்களை வீசித் தாக்குதல் நடத்தினர்.

தயுசா மாவட்டத்தில் தனது ஆதரவாளர்களுடன் வாக்குச் சாவடிக்கு ஊர்வலமாகச் சென்ற அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் அவருக்கு லேசாக காயம் ஏற்பட்டது.

இதே மாவட்டத்தில் ராஜ்கர் என்ற இடத்தில் வாக்குப் பதிவு எந்திரத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக வாக்குப் பதிவு பாதிக்கப்பட்டது.

# தேர்தலுக்கு பின்னர் தனி ஈழம் குறித்து ஜெயலலிதா பேசுவாரா-திருமா கேள்வி

விழுப்புரம், மே 9

தனி ஈழம் குறித்து இப்போது பேசும் அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா, தேர்தலுக்குப் பின்னர் பேசுவாரா - என்று விடுதலைச் சிறுத்தைகள்கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் கேள்வி எழுப்பியுள்ளார்.

விழுப்புரத்தில் கடந்த புதன்கிழமை பிரசாரம் மேற்கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.மேலும் அவர் கூறியவை வருமாறு -

இப்போது அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள பா.ம.க., ம.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் கடந்த காலங்களில் ஜெயலலிதாவை குறை கூறியவர்கள். ஆனால் இன்று அவரை புகழ்ந்து பேசுகிறார்கள். தனி ஈழம் என்று பேசும் ஜெயலலிதா இந்தத் தேர்தலுக்குப் பின்னர் அதைப் பற்றிப் பேசுவாரா என்பது சந்தேகமே. ஆனால் கருணாநிதி தமிழுக்காகப் போராடக் கூடியவர். எங்களை வன்முறைக் கட்சி என்று கூறுகின்றனர் - என்றார்.

# இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதற்கு காங்கிரஸ் அரசே காரணம் என்கிறார் அத்வானி!

சென்னை, மே 9

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுகின்றமைக்கு மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசே காரணம் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் பிரதமருக்கான வேட்பாளரும், மூத்த தலைவருமான எல்.கே.அத்வானி குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பரமக்குடியில் பிரசாரம் செய்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

தற்போது 15ஆவது நாடாளுமன்றத் தேர்தல் நடந்து கொண்டிருக்கிறது. 1952ஆம் ஆண்டில் இருந்தே நாடாளுமன்றத் தேர்தலை நான் பார்த்து வருகிறேன். இந்தத் தேர்தலுக்காக இந்தியா முழுவதும் இதுவரை 123 மாவட்டங்களில் நான் சுற்றுப்பயணம் செய்து பிரசாரம் செய்துள்ளேன். முதன்முறையாக பரமக்குடிக்கு தற்போதுதான் வருகிறேன். இங்கு வந்திருப்பது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

ஜவகர்லால்நேரு முதல் மன்மோகன் சிங் வரை பிரதமராக இருந்து பணியாற்றியவர்களையும் நான் பார்த்து வருகிறேன். 45 ஆண்டுகள் காலம் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்துள்ளது. ஆனால் அவர்கள் மக்களுக்கு எந்த நன்மையையும் செய்யவில்லை. மன்மோகன்சிங், பெயருக்குத்தான் பிரதமராக உள்ளார். சோனியா காந்திதான் பிரதமரை இயக்கி வருகிறார்.

கடந்த 15 ஆண்டுகாலமாகத்தான் காங்கிரஸ், பாரதீய ஜனதா என்ற இரு கட்சி ஆட்சி முறை நடந்து வருகிறது. பாரதீய ஜனதாக் கட்சி தலைமையில் செயற்பட்டு வந்த தேசிய ஜனநாயக முற்போக்கு கூட்டணியில் இருந்த கட்சிகளுக்கு கொள்கை ரீதியாக வேறுபாடு இருந்தாலும் பிரதமராக இருந்த வாஜ்பாய் எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொண்டு அவர்கள் செயற்பட்டனர். ஆனால் ஐக்கிய முற்போக்குகூட்டணியில் அப்படியொரு நிலை இல்லை.

தேசிய ஜனநாயக முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் இருந்தபோது இந்தியாவின் கட்டுப்பாட்டில் இலங்கை இருந்தது. ஆனால் தற்போது இந்தியாவின் கட்டுப்பாட்டில் இலங்கை இல்லை. இதனால் இலங்கையில் வசிக்கும் தமிழர்கள் பெரும் துன்பத்தை அனுபவிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதற்கு காங்கிரஸ் அரசே காரணம்.

இன்று (நேற்றுமுன்தினம்) காலை வெளியுறவுத்துறை அமைச்சரை நேரில் சந்தித்து நேபாளம், இலங்கை பிரச்சினை குறித்து பேசினேன். இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று அவரிடம் உறுதிபடத் தெரிவித்துள்ளேன்.

இலங்கையில் தமிழர்கள் தாக்கப்படுவது குறித்து இங்குள்ள தமிழர்கள் வேதனைப்படும் அதேவேளையில், நேபாளத்தில் நடப்பது குறித்து உத்தரப் பிரதேசம் மற்றும் பீகாரைச் சேர்ந்தவர்களும் வேதனைப்படுகின்றனர்.

இதையெல்லாம் பார்க்கும்போது இந்தியாவின் வெளியுறவுத்துறை கொள்கை முற்றிலுமாக சீரழிந்து விட்டது என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால் பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சியின்போது வெளியுறவுத்துறையின் செயற்பாடு சிறப்பாக இருந்தது - என்றார்.

# ஈழத் தமிழரின் பிணங்களை அடக்கம் செய்ய இலங்கைக்கு மின் தகன உலைகளை அனுப்புக!

## இரா. செழியன் கோரிக்கை

சென்னை, மே 9

இலங்கையில் அழுகிக் கிடக்கும் தமிழர்களின் பிணங்களைத் தகனம் செய்ய, இந்தியா மின் தகன உலைகளை அங்கு அனுப்ப வேண்டும் என்று முன்னாள் எம்.பி. இரா. செழியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கை வருமாறு -

இலங்கையில் அல்லற்படும் தமிழர்களுக்கு தக்க பாதுகாப்பையும், அடிப்படை உரிமைகளையும் வழங்க வேண்டும் என தமிழக மக்கள் போராடி வருகிறார்கள்.

இலங்கையில் போர் நிறுத்தம் கோரி பல முயற்சிகள் மேற்கொண்டும் பயனில்லை. கடைசியாக ஏப்ரல் 27இல் முதல்வர் கருணாநிதி திடீர் உண்ணாவிரதம் மேற்கொண்டார். போரை நிறுத்த இலங்கை அரசு முன்வந்துள்ளது எனக் கூறி உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார். ஆனால் போர் நிறுத்தம் அறிவிக்கவில்லை என இலங்கை அரசு உடனே மறுத்தது.

இந்நிலையில் வவுனியாவில் தமிழர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசுக்கு எந்தவித அக்கறையும் இல்லை. மத்திய, மாநில அரசுகளில் ஆதிக்கம் பெற்றுள்ள தி.மு.கவுக்கு, இந்திய அரசைக் கட்டுப்படுத்தக் கூடிய எவ்வித வலிவும் இல்லை. இந்நிலையில் இலங்கையில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டு, வீதியோரத்தில் அழுகிக் கொண்டிருக்கும் பிணங்களாகக் கிடக்கின்றனர்.

இறந்தவர்களின் உடல்களை உரிய முறையில் அடக்கம் செய்ய வேண்டியது நமது கடமை. இலங்கைக்கு முன்பு இராணுவத் தளவாடங்களை அனுப்பிய நாடு இந்தியா. அதற்கு பரிகாரம் தேட, உடனடியாக அங்கு மின் தகன உலைகளை அனுப்ப வேண்டும் - என்றார்.



சென்னை சைதாப்பேட்டையில் நேற்றுமுன்தினம் நடந்த பொதுக்கூட்டத்தில் பாரதிய ஜனதா வேட்பாளர்கள் இல.கணேசன், தமிழிசை சௌந்தர்ராஜன் ஆகியோரை அறிமுகப்படுத்தினார் கட்சித் தலைவர் அத்வானி. அருகில் ஜனதாக் கட்சி தலைவர் சுப்பிரமணியசாமி, சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் சரத்குமார் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# கருணாநிதியை சமாதானப்படுத்த சென்னை வருகிறார் மன்மோகன்

சென்னை, மே 9

அ.தி.மு.கவுடன் காங்கிரஸ் கூட்டு சேரக் கூடும் என்ற ராகுல் காந்தியின் பேட்டியால் கோபமடைந்துள்ள தி.மு.க. தலைவர் கருணாநிதியைச் சமாதானப்படுத்துவதற்காக இன்று சென்னை வருகிறார் பிரதமர் மன்மோகன் சிங்.

சென்னை வரும் பிரதமர், பொதுக்கூட்டம் எதிலும் பங்கேற்கவில்லை. அப்பல்லோ வைத்தியசாலையில் தங்கியுள்ள முதல்வர் கருணாநிதியை மட்டும் சந்தித்துப் பேசுகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கருணாநிதியின் உடல் நிலை காரணமாக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி சென்னையில் கடந்த புதன்கிழமை பங்கேற்கவிருந்த கூட்டம் ஒத்திவைக்கப் பட்டது.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை ராகுல் காந்தி அளித்த பேட்டியில், காங்கிரஸோடு ஒத்த கருத்துள்ள கட்சியாக அ.தி.மு.க. இருக்கிறது என்று கூறியமை கருணாநிதியைக் கோபமடையச் செய்துள்ளது.

வைத்தியசாலையில் தன்னை வந்து சந்தித்த காங்கிரஸ் மேலிடப் பார்வையாளர் குலாம் நபி ஆசாத் மற்றும் காங்கிரஸ் சட்டப் பேரவைத் தலைவர் டி.சுதர்சனத்திடமும் தனது அதிருப்தியை கருணாநிதி வெளிப்படுத்தினார் எனத் தெரிகிறது.

கருணாநிதியின் அதிருப்தி குறித்து குலாம்நபி ஆசாத், டில்லிக்கு உடனே தகவல் அளித்தார். அத்தோடு சில தொலைக்காட்சிகளை அழைத்து தி.மு.க. கூட்டணியில்தான் இருக்கிறோம் எனத் தெளிவுபடுத்தினார்.

இதனையடுத்தே கருணாநிதியைச் சந்தித்து சமாதானப்படுத்த பிரதமரை அனுப்ப முடிவு செய்யப்பட்டது என காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# தமிழக அரசின் நிவாரணப் பொருள்கள் இன்னும் ஓரிரு நாள்களில் கொழும்புக்கு

சென்னை, மே 9

இலங்கைத் தமிழர்களுக்குத் தேவையான உணவுப்பொருள்கள் அடங்கிய 50 ஆயிரம் பொதிகள், சென்னையில் இருந்து கப்பல்கள் மூலம் ஓரிரு தினங்களில் இலங்கைக்கு அனுப்பப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை தமிழர்களுக்கு உணவுப் பொருள்கள் அடங்கிய 50 ஆயிரம் பைகளை வழங்க தமிழக அரசு முடிவு செய்தது. இவற்றை தயார் செய்து பொதி செய்யும் பணி, சென்னையில் கடந்த சில நாள்களாக நடந்து வந்தது.

பாதிக்கப்பட்ட ஒவ்வொரு இலங்கை தமிழர் ஒருவருக்கு ரூபா 1,530 செலவில் இவை வழங்கப்பட உள்ளன.

தற்போது தேர்தல் நடத்தை விதி முறைகள் அமுலில் இருப்பதால், இந்தப் பொருள்களை அனுப்புவதற்காக இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. இதற்கான அனுமதி கிடைத்ததும், இலங்கைத் தமிழர்களுக்கு இந்தப் பொருள்கள் அனுப்பப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தப் பொதிகள் தற்போது லொறிகள் மூலமாக சென்னை துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு வருகின்றன. அங்கு கொன்டெய்னர்களில் இவைகள் அடைக்கப்பட்டு வருகின்றன. பின்னர், இந்த பொருள்கள் கப்பல்களில் ஏற்றப்பட்டு, ஓரிரு தினங்களில் இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். அங்கிருந்து பாதிக்கப்பட்டோருக்கு பொருள்கள் விநியோகம் செய்யப்படும் என்று மேலும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெசாக் தினத்தை ஒட்டி யாழ். நாகவிகாரைப் பகுதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் அமைக்கப்பட்டிருந்த வெளிச்சக் கூடு அலங்காரங்களைப் படங்களில் காணலாம்.

# வெசாக் தினத்தை ஒட்டி யாழ். விகாரையில் நேற்று முழுநாளும் விசேட மத வழிபாடுகள்

## வெளிச்சக் கூடு அலங்காரங்களும் காணப்பட்டன

குருநகர் மே 9.

வெசாக் பூரணைதினமான நேற்று யாழ். நாகவிகாரையில் விசேட வழிபாடு கள் நடைபெற்றன.

யாழ். நகரில் உள்ள படையினர், பொலி ஸார் மற்றும் அவர்களது குடும்பத்தவர்கள் வெள்ளை உடை உடுத்தி மலர்த்தட்டுகளுடன் இவ் வழிபாட்டில் நேற்று காலை கலந்து கொண்டார்கள்.

யாழ். நாகவிகாரையிலும் யாழ். ஸ்ரான்லி வீதியிலும் வெள்ளை நிறத்திலான தோரணங்கள் அலங்கரிக்கப்பட்டுக் காணப்பட்டது.

யாழ்- காங்கேசன் வீதியில் அமைந் துள்ள படையினர் சோதனைச் சாவடிகள் சிலவற்றின் முன்பாக வெளிச்சக்கூட்டு அலங்காரங்கள் காணப்பட்டன.

யாழ்-கே.கே.எஸ் வீதியில் நாச்சிமார் கோவில் தொடக்கம் கோண்டாவில் வரை உள்ள வீடுகள், வர்த்தக ஸ்தாபனங்கள் முன்பாக சிறிய வர்ண வெளிச்சக் கூடு களை மக்கள் நேற்று மாலை கட்டியிருந்தனர். படையினர் இவைகளை வழங்கினர் என்று பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டது. (1-51-25)

# நேற்றைய தாக்குதல்களில் 134 பேர் பலி! நிவாரணம் பெறச் சென்ற 32 பேரும் அடங்குவர்!!

கொழும்பு, மே 9

முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்தில் படையினர் நேற்று நடத்திய தாக்குதல்களில் மொத்தம் 134 பேர் கொலையுண்டதுடன் 199 பேர் காயமடைந்தனர் என்று இணையத்தளத் தகவல்கள் நேற்றிரவு தெரிவித்தன. கொலையுண்டவர்களில் 32 பேர் நிவாரணப் பொருள்களை வாங்குவதற்குக் காத்திருந்தவர்கள் என்றும் இணையத்தளங்கள் மேலும் தெரிவித்தன.

நேற்றைய தாக்குதல்கள், பாதிப்புகள் குறித்து இணையத்தளங்களில் வெளியான விவரங்கள் வருமாறு:-

நட்டாங்கண்டல் தற்காலிக மருத்துவமனைக்கு அருகில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் நிவாரணங்களைப் பெறுவதற்காக மக்கள் வரிசையில் கூடி நின்ற போது வான்படையின் வேவு வானூர்தி படம் எடுத்துக் கொண்டிருந்தது. அந்தவேளையிலேயே படையினர் தரையில் இருந்து அகோரமான பீரங்கித் தாக்குதல்களை மக்கள் கூடிநின்ற பகுதி மீது நடத்தினர். பீரங்கிக் குண்டுகள் மக்கள் மத்தியில் வீழ்ந்து வெடித்தன. இதனால், 32 பேர் கொல்லப்பட்டும் 43 பேர் காயமடைந்தும் உள் ளனர்.

முள்ளிவாய்க்கால் பகுதியில் நடத்தப்பட்ட பீரங்கித் தாக்குதல்களில் 102 பேர் பலியானதுடன் 156 பேர் காய மடைந்துள்ளனர்.

படையினர் நடத்திய திடீர் தாக்குதலில் கொல்லப்பட்ட மக்களின் சடலங்கள் ஆங்காங்கே சிதறிக்கிடக்கின்றன என்றும் காயமடைந்தவர்கள் மருத்துவனைக்கு எடுத்துச்செல்ல முடியாத நிலையில் தரையில் படுத்திருந்தவாறு அவதிப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மக்கள் செறிவாக இருந்த பகுதிகளை நோக்கி கனரக பீரங்கி சூட்டுத் தாக்குதல்களும் நடத்தப்பட்டன - என்றுள்ளது.

(அ)


## கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்

## அரங்கேற்ற அழைப்பு

கலாபூஷணம் எம்.சிதம்பரநாதன் அவர்களின் மாணவன்

செல்வன் மோகலிங்கம் சஞ்ஜீவன்

அவர்களின் மிருதங்க அரங்கேற்ற விழா

10.05.2009 ஞாயிறு காலை 9.00 மணி

இடம்: இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபம், நல்லூர்.

திரு. இ.த. ஜெயசீலன் அவர்கள் (உதவி அரசாங்க அதிபர், காரைநகர்)

முதன்மை விருந்தினர்கள்:

பேராசிரியர்.வே.தர்மரத்தினம் அவர்கள்

(வாழ்நாள் பேராசிரியர், யாழ்.பல்கலைக்கழகம்)

திருமதி கனகேஸ்வரி தர்மரத்தினம் அவர்கள்

சிறப்பு விருந்தினர்கள்:

திரு.ப.விக்னேஸ்வரன் அவர்கள் (வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர்)

திரு.வி.கணேசராசா அவர்கள் (அதிபர், யாழ். இந்துக் கல்லூரி)

அரங்கிசைக் கலைஞர்கள்

| | | |
|---|---|---|
| முதுதத்துவமாணி | செல்வி பரமேஸ்வரி கணேசன் | பாட்டு |
| முதுதத்துவமாணி | திரு.கா.குகபரன் | வயலின் |
| | செல்வன் மோ.சஞ்ஜீவன் | மிருதங்கம் |
| கலாவித்தகர் | திரு. தி.சண்முகசுந்தரம் | கஞ்சிரா |
| கலாவித்தகர் | திரு. வ.ரமணா | கடம் |
| கலாவித்தகர் | திரு. ந.சதீஸ்குமார் | முகர்சிங் |



அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.திருமதி.இந்திரன்,
திருமதி மோகலிங்கம் குடும்பத்தினர்,
கிழவன்காடு கலாமன்றத்தினரும்
காரைநகர், இலங்கை.


## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்குறிப்பிட்ட பிரதேசத்துக்கு வெளியில் இருக்கும் பகுதிகளில் இராணுவம் தொடர்ந்தும் விடுதலைப்புலிகள் மீதான தங்களின் தாக்குதல்களை தொடரும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

ஆறு சதுர கிலோமீற்றர் பிரதேசம் பாதுகாப்பு வலயமாக விளங்கிவந்த நிலை மாறி, தற்போது இரண்டரை சதுர கிலோமீற்றர் பகுதியாக இது குறைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முள்ளிவாய்க்காலில் இருந்த விடுதலைப் புலிகளின் கடைசி சுராங்கக் காவலரணை இராணுவம் கைப்பற்றியதைத் தொடர்ந்து பாதுகாப்பு வலயப் பிரதேசம் குறைக்கப்பட்டுள்ளது. (அ)

# புத்தளத்தில் இளைஞர் கொலை

புத்தளம், வான்குளம், ஹஸனாத் பள்ளி வாசல் வீதியில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஒரு பிள்ளையின் தந்தையான எவ். றபீஸ் (வயது - 21) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

உயிரிழந்தவரின் தலையில் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன என வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவரின் சடலம் புத்தளம் வைத்தியசாலையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது.


## LIONS CLUBS INTERNATIONAL DIST. 306 B1

JOINT REGION SEMINAR
REGIONS 07, 08 & 09

VENUE - PRADESHA SABHA HALL, MANIPAY.
DATE & TIME - 10.05.2009 (SUNDAY) 9.30 A.M.
CHIEF GUEST - Lion S.SIVARAJEESWARAN
{Deputy Cabinet Secretary (North)}
GUEST OF HONOUR - Lion S.S.THANGARAJAH J.P.
{Deputy Cabinet Treasurer (North)}

All Lions are kindly requested to participate at the seminar & make the event memorable.

Lion K.Thurairaja
(Seminar Director)

Lion C.Sunthareswaran M.J.F.
(Region Chair person - 07)

Lion P.Sripirahas
(Region Chair person - 08)

Lion K.Kengaiveniyan
(Region Chair person - 09)


## மரண அறிவித்தல்

### திருமதி ஆதிபுவனேஸ்வரி செல்வராசா

(ஓய்வு பெற்ற ஆசிரியை, யாழ்.கல்வயல் சண்முகானந்தா வித்தியாசாலை)



கல்வயல், சாவகச்சேரியை சொந்த இடமாகவும் கோப்பாய் மத்தியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஆதிபுவனேஸ்வரி செல்வராசா நேற்று (08.05.2009) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி பொன்னம்பலம் தம்பதியரின் அன்பு மகளும் து.செல்வராசா(ஓய்வுபெற்ற அதிபர், யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு துணைவியும், திருமதி மலர்விழி(ஆசிரியை, கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற இளங்கோ மற்றும் திருமதி கயல்விழி(ஆசிரியை, யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), திருமதி வேல்விழி (லண்டன்), காலஞ்சென்ற இளங்குமரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், க.சேய்ந்தன் (ஆசிரியர், கொ/பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), கா.ஜெயந்தன் (ஆசிரியர், யாழ்.கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), க.ஸ்ரீதரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், திருமகள், கபிலன், பிரணவி, கஜந்தன், விசாகன், ஷாம்பவி, அபிராமி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் மத்தி,கோப்பாய். து.செல்வராசா(கணவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மக்கள் பாதுகாப்பு வலயம் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்தவர்களை படங்களில் காணலாம்.

## புலிகள் வசம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களிடம் புலனாய்வுத்துறையினர் மேற்கொண்ட விசாரணைகளின் போது, ஹெலிகொப்ரர் ஒன்றும் மற்றொரு விமானமும் புலிகளிடம் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதாக இந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

1990 களின் தொடக்கப் பகுதியிலேயே விடுதலைப் புலிகள் ஹெலிகொப்ரர் ஒன்றைக் கொள்வனவு செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவில் உள்ள வட்டுவாகல் அம்மன் கோயில் திருவிழாவின் போது இந்த ஹெலிகொப்ரர் முதல் தடவையாகப் பறந்ததை ஆயிரக்கணக்கான மக்கள் பார்த்துள்ளார்கள்.

அதனையடுத்து 1998 நவம்பர் மாதம் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் முல்லைத்தீவில் உள்ள மாவீரர் துயிலும் இல்லம் ஒன்றில் இந்த ஹெலிகொப்ரர் மலர்களைச் சொரிந்தமையையும் பலர் கண்டுள்ளார்கள். இதேபோல 2004 ஆம் ஆண்டு மாவீரர் நாளின்போது விசுமடுவில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்திலும் இந்த ஹெலிகொப்ரர் மலர்களைத் தூவியது.

படையினரின் நடவடிக்கைகளின் போது கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவர், புலிகளிடம் நான்கு விமானங்களும், ஒரு ஹெலிகொப்ரரும் இருப்பதாக புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளின் போது தெரிவித்திருந்தார்.

அவற்றில் இரண்டு விமானங்கள் கொழும்பில் இடம்பெற்ற தாக்குதலின்போது அழிந்துவிட்டன.

மற்றையதில் ஒன்றை புலிகள் இப்போதும் தம்வசம் வைத்திருக்கின்றார்கள். எஞ்சியுள்ள விமானம் எங்கே என்பது தனக்குத் தெரியவில்லை என அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

2004 ஆம் ஆண்டில் இரணைமடுவில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் பிரதான விமான ஓடுபாதையில் சரக்கு விமானம் ஒன்று வந்து இறங்கிச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

அதில் இருந்து பெருமளவு பொருள்கள் இறக்கப்பட்டதாகத் தெரிவிக்கும் புலனாய்வுத்துறையினர் இவ்வாறு கொண்டு வரப்பட்ட பொருள்கள் என்ன என்பதை அறிய முடியாதிருப்பதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை விளாத்திக்குளம் பகுதியில் இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான புலனாய்வு நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆள்களின்றிச் செல்லும் விமானம் (UAV) ஒன்று விடுதலைப் புலிகளின் விமானம் ஒன்றினாலேயே சுட்டுவீழ்த்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. தமது விமானத்தில் பொருத்தப்பட்டிருந்த பல்நோக்கு இயந்திரத் துப்பாக்கி ஒன்றைப் பயன்படுத்தியே இலங்கை விமானப் படையின் உளவு விமானத்தைப் புலிகள் சுட்டு வீழ்த்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்போது புலிகள் வசம் உள்ள விமானம் மற்றும் ஹெலிக் கொப்ரருக்குப் புஸ்பானந்தன் என்பவரே பொறுப்பாக இருப்பதாகவும் விடுதலைப்புலிகளிடம் ஆகக் குறைந்தது விமானம் ஓட்டும் பயிற்சி பெற்ற பத்துப் பேர் இருப்பதாகவும் அவர்களுக்கு தெய்வன் என்பவரே தலைமைப் பொறுப்பு வகிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அவர்களில் இருவரான சிறிதரன் மற்றும் ரூபன் ஆகியோர் பெப்ரவரி மாதத் தாக்குதலில் இறந்தார்கள் என்றும் அறியவந்துள்ளது.

சிறிதரனும், ரூபனும் 2002 ஆம் ஆண்டில் ரஷ்யா சென்று விமானிகளாக பயிற்சி பெற்றனர். அதன் பின்னர் 2003 ஆம் ஆண்டில் வெளிநாட்டு விமானிகள் நாலுக்கு மேற்பட்டவர்கள் இங்கு வந்து விசுவமடுவில் உள்ள அல்பா - 4 தளத்தில் மேலதிக பயிற்சி வழங்கினர் என்றும் தெரிய வந்துள்ளது.

ரூபன், முத்தமிழ், பொற்கிரன், கலாவாணன், தென்றல், முகில்வாணன் ஆகியோரும் விமானம் செலுத்துவதில் பயிற்சி பெற்றவர்கள். இவர்கள் அனைவரும் கரும்புலிகள் அணியைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களுக்கு விமானம் ஓட்டும் பயிற்சி இரவு வேளைகளிலேயே வழங்கப்பட்டதாகவும் இப்போது கைதான விடுதலைப்புலிகள் உறுப்பினர் மூலம் தகவல் கிடைத்திப்பதாகவும் புலனாய்வுத்துறை வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளதாகவும் கொழும்பு ஊடகம் தெரிவித்திருக்கிறது. (அ)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொச்சிக்கடை, மட்டக்குளி, முகத்துவாரம் உட்பட பல பகுதிகளிலேயே இந்தத் தேடுதல் நேற்று நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தேடுதல் சுற்றிவளைப்பின் போது ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பாதுகாப்பு தரப்பினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களில் தமது பதிவை உறுதிப்படுத்தத் தவறியவர்களே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-சி)

## ஆஸ்திரேலியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடக்கம் மாலை 6 மணி வரை ஓயாத 'உரிமைக் குரல்' நிகழ்வு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நேற்றுமுன்தினம் பெருமளவிலான தமிழ் மக்கள் கலந்துகொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர்.

மெல்பேர்ண் நகரில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ள பேரணியானது தற்போது தொடர் போராட்டம் நடைபெறும் பகுதியிலிருந்து முற்பகல் 11 மணியளவில் தொடங்கப்படவுள்ளது.

மெல்போர்ண் வாழ் அனைத்து தமிழ் உறவுகளும் இந்தப் பேரணியில் அணி திரண்டுவந்து இதுவரை காலமும் வழங்கிவந்த பேராதரவைப் போன்று இதற்கும் தரவேண்டும் என தமிழ் இளையோர் கேட்டுள்ளனர். (அ-சி)

## பிரிட்டிஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் நலன்புரி நிலையங்களில் பிரிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் சேர்க்கப்பட வேண்டும், இடம்பெயர்ந்த மக்களை சோதனையிடும் நடவடிக்கைகள் வெளிப்படையாக மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த மக்கள் குறுகிய விரைவில் தமது பகுதிகளுக்குத் திரும்புவதற்கான திட்டமொன்று வகுக்கப்படவேண்டும் என்றும் பிறவுணி தெரிவித்துள்ளார்.

''இலங்கை அரசு வெளிப்படைத் தன்மையையும் பகிரங்க செயற்பாடுகளையும் விரும்பவில்லைப்போல் தென்படுகிறது; தயங்குகிறது. அவர்கள் சர்வதேச சமூகத்தை உள்ளே அனுமதித்தால் இலங்கை நிலைவரம் குறித்து சமநிலையான - பக்கச்சார்பற்ற கருத்து உருவாகலாம் என்றும் டெஸ் பிறவுணி தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்கள் பாதுகாப்பானவையாகக் காணப்பட்டாலும் அனைத்தும் அங்கு சரியாக இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்த விடயங்கள் தொடர்பாக இந்தியத் தலைவர்களுடன் தாம் பேச்சு நடத்தினார் என்று பிறவுணி மேலும் கூறினார்.

இலங்கை விவகாரங்களில் பிரிட்டனின் விசேடதுதுவராக டெஸ் பிறவுணியை அந் நாட்டின் பிரதமர் நியமித்திருந்ததும், இலங்கை அரசு அவரது நியமனம் தேவையற்றது என்று நிகாரரித்திருந்தமையும் தெரிந்தவையே. (அ-சி)

## மாளிகாவத்தைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வெள்ளிக்கிழமை மதியம் ஜும்மா தொழுகையை முடித்துவிட்டு பள்ளிவாசலுக்கு முன்பாக நின்றவர்கள் மீது, அங்கு வான் ஒன்றில் வந்த முகமூடி அணிந்த ஆயுததாரிகள் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் என அப்பகுதியிலிருந்த மக்கள் தெரிவித்தனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த சிலரை ஆயுததாரிகள் கடத்திச் சென்றுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான முஹமட் சதாத் (வயது - 30) என்பவரே இத்துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி உயிரிழந்தவராவார்.

இத்துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (அ-சி)

## விடுதலைப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லேயே இந்தத் தகவல்களை அவர் தெரிவித்திருக்கின்றார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போர் நடைபெறும் பகுதியில் உள்ள மக்களை குறைந்தபட்ச இழப்புகளுடன் மீட்பதுதான் எமது நோக்கமாகும். நாடு, அரசு என்ற வகையில் எமக்குப் பொறுப்பு உள்ளது. பொதுமக்களைக் கொன்று இதனைச் செய்யமுடியாது. இந்த விடயத்தில் வெளிநாடுகளின் தலையீடுகள் பற்றியும் கவனத்தைச் செலுத்த வேண்டியிருக்கின்றது. இவ்வாறான தலையீடுகளை ஏற்படுத்தும் நோக்கிலேயே விடுதலைப் புலிகளும் தங்களுடைய இணையத்தளங்களில் படங்களை வெளியிட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

### அந்நியர் தலையீடுகள் தவிர்க்கப்பட வேண்டும்

போர்முனையில் விடுதலைப் புலிகளை வெற்றிகொள்வதற்கான அனைத்தையும் நாம் செய்யும் அதேவேளையில், இந்த அந்நியத் தலையீடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கும் வழிவகைகளைப் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கின்றது. இதன் காரணமாகவே கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை என்ற அறிவிப்பை அரச தலைவர் வெளியிட்டார். இருந்தபோதிலும் விடுதலைப் புலிகளின் மண் அணைகள் மற்றும் பதுங்குகுழிகளைத் தகர்ப்பதற்கு அவர்களுக்கு எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை.

அரச தலைவர் மற்றும் முப்படையினர் மீது மக்கள் நம்பிக்கை வைக்கவேண்டும். ஊடகங்கள், அரசியல்வாதிகள் மற்றும் அனைத்துலக சமூகம் எனப் பலர் உரத்துக் குரல் கொடுத்தாலும் நாம் ஒரே நம்பிக்கையுடன் செயற்பட்டதாலேயே எம்மால் இப்போதைய நிலைக்கு வர முடிந்தது. இந்த நம்பிக்கையுடன் தொடர்ந்தும் இருந்தால்தான் ஏனைய பகுதிகளையும் மீட்டெடுக்க முடியும் - என்றார். (அ-சி)


புதிய பிரிவு நிருட்டன் அக்கடமி அரசடி வீதி நல்லூர், யாழ்ப்பாணம். புதிய பிரிவு

3மாத காலத்தில் பேச, எழுத, வாசிக்க
SPOKEN ENGLISH WITH GRAMMAR
BY:- KARAN
START:- 10.05.2009 SUN - 2.00pm

சரளமாக உரையாட
சிங்களம்
பேராசிரியர்:-
திரு.லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம்:- 10.05.2009
SUN 3.00pm

(அனுமதிக்கு முந்துங்கள்)

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
I.C.T. Gr 10 & 11
Sat 7 a.m, Sun 8 a.m.
Mr.D.Shelton

LAVA HOSPITAL
75, Temple Road, Jaffna. T.P. 222 4333
[ICRC சந்தி அருகாமையில்]
* நவீன ஸ்கான் (Scan), ECG மற்றும் இரத்த, சல பரி சோதனைகள்
'அடிப்படை உடற் பரிசோதனைகள்'
* டிஜிட்டல் தொழில் நுட்பத்தினாலான ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படும்.
* உடல் பருமனைக் குறைப்பதற்கான சிகிச்சைகள்.
* பற்சிகிச்சை கிளினிக் - தினமும் பி.ப. 4 மணி - 6 வரை.
Branches
151, Kannathiddy Road. T.P.: 021 222 7251
71, Sivapiragasam Road, Vannarponnai, Jaffna.
web: www.lavaonline.net E.mail: lavasss@yahoo.com

முதுகலைமாணி ஆய்வுகளை ஆவணமாக்குகின்றோம்.
உங்களின் உயர்கல்வி ; நீண்டநாள் ஆய்வுத் தேடல்களை சிறந்த முறையில் கணினியில் வடிவமைத்து பைண்டிங் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
அகரம் கணினி பதிப்பகம்
பிறவுண் வீதி (தொழில்நுட்ப கல்லூரி முன்பாக) 021 222 4510

கற்சுமி வெளியீடு
தரம் 1,2,3,4,5 மாணவர்களுக்குரிய ஏப்ரல் - மே மாத இதழ்கள்
அம்மா அன்னை தாய் அறிவு தேடல்
வெளிவந்து விட்டன!
''உங்கள் பிள்ளையின் ஆற்றலை மேம்படுத்தும்''
கற்சுமி, 166, நாவலர் வீதி, யாழ்

A/L 2011 சனி மதியம்
தமி: திரு.குழந்தை
அள: திரு.கமல்
இ.நா.: திரு.ஜெயக்குமார்
அரசி.: திரு.ஸ்ரீரங்கநாதன்
புவி.: திரு.கரன்
நாட.: திரு.மயூரன்
இ.சம.: திரு.ஜெயக்குமார்
வரலா.: திரு.சசி
பொரு.: திரு.சண்
வணி.: திரு.யசோ
கண.: திரு.தவா
* தனிப்பாட அனுமதி உண்டு.
யூனிவேர்சல்

O/L DAY CLASS
ஆரம்பம் : 09.05.2009
சனி 7.30 a.m
யூனிவேர்சல்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)

அறிவொளி Nallur
A/L 2011
Com. Maths
Mr.கண்ணன் B.Sc.
நடைபெறுகிறது.
Sat, Sun
5.00 - 6.30 p.m

அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பிரத்தியேக வகுப்புக்கள்
அரசியல் By:- T.திருமுருகன்.
2011- அரசறிவியல்- அறிமுகம்
2010- இலங்கை அரசியல்- பகுதி 11
2010-2009 - பகுதி I Paper class
ஆரம்பம் 10.05.2009 ஞாயிறு
மேலதிக தொடர்பு T.P- 0771753838.
உடுவில் மகளிர் பாடசாலை முன்பாக ஆக்லேன் எதிர் By Lane - 7.00 am
டச்சு வீதி- உடுவில்- சங்குவேலி- 5.00 pm.

Microsoft & Implementing Partner
Conducting Schedule
1- Full Time
2 - Part Time
வகுப்புக்கள் ஆரம்பம்
- 09-05-2009
- 11-05-2009
IDM Affiliated University College


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.05.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org